மனிதமே முதன்மை!

# முற்றம்

பல்சுவை இதழ்

இல்லம் : 5 சுற்றம் : 9 செப்டம்பர் 2017 விலை : ரூ.10/- ஆசிரியர் : விசவனூர் வே. தளபதி

## திரைத்தேரில் பவனி வரும்

## பாடகர் பவன்








31-08-2017 வியாழக்கிழமை
திருமண விழாவில் இணைந்த,
அ. தீபா - ம. சரவணன் இணையர்
எல்லா வளங்களும் பெற்று நலமுடன்
பல்லாண்டு வாழ வாழ்த்துகிறேன்.

வேல்பொன்முடி,
தெற்கு விசவனூர்.



மனிதமே முதன்மை!

# முற்றம்

பல்சுவை இதழ்

Mutram monthly September 2017

ஆசிரியர்
**விசவனூர் வே.தளபதி.**
இணை ஆசிரியர்கள்
பேராசிரியர் **அப்பாத்துரை**
**அ.வெற்றிவேந்தன்** எம் .ஏ., பி.எல்.,
துணை ஆசிரியர்
**இமயவரம்பன்** பி.எஸ்சி.,எம் .ஏ.,பி.எல்.,
உதவி ஆசிரியர்கள்
**அ. உமாமகேசுவரி** எம் .ஏ.,
**ஜெ. ராஜாசிங்,**
**ஜெய்**
தலைமைச் செய்தியாளர்கள்
**வே. வளையாபதி**
**த. ஞானமணி** பி.எஸ்.சி., பி. எட்.,

செய்தியாளர்கள்
**பொன்முடி** சிவகங்கை
A.**அமல்ராஜ்**
**க. பவானி** பி.ஏ.,
**நாராயணன்**
**சிவக்குமார்** மதுரை
**ரஞ்சித் இமானுவேல்**
**சாதிக்பாட்சா** கோவை
**மு.கலைச்செல்வன்**
**வே. பால்ராஜ்** மதுரை
**ஞா. ஜான்சன் டேவிட்** மதுரை
**ராஜா சாக்ரடீஸ்** தஞ்சை
**அருணகிரி** திருவள்ளூர்
**லூக்காஸ்** அம்பத்தூர்

வடிவமைப்பு
**எழில் வரைகலை**
புகைப்படக்காரர்
**இரமேஷ்**
அலுவலக முகவரி
எண் 124, என்.டி.ஆர். தெரு, ரங்கராஜபுரம்,
கோடம்பாக்கம், சென்னை- 600 024
பேச: 8056281973, 044 42154408.
மின்னஞ்சல்:
mutram2010@gmail.com
இணைய தளம் :
www.mutram.in

MUTRAM
Indian Bank Account No,CA 920493454.
Rangarajapuram branch.
Kodambakkam, chennai

## உள்ளே

அசல் ஓட்டுநர் உரிமம் (தலையங்கம்)........ 4

தனிநபர் ரகசியம் காப்பது அடிப்படை உரிமை........ 6

40 வகைக் கீரைகளும் அதன் முக்கியப் பயன்களும்........ 8

ஆலந்தூர் கோ. மோகனரங்கம் வாழ்க்கைக் குறிப்புகள்........ 9

அனைத்திலும் தமிழ் இருந்தது அடிமையாட்சி
சுத்தமாகத் தமிழ் இல்லை சுதந்திர ஆட்சியா?
– அறிஞர் அருகோ பேச்சு........ 11

திரைத்தேரில் பவனி வரும் பாடகர் பவன்........ 12

கச்சத்தீவு
– இராஜாசிங்........ 15

தமிழக அரசியல்
– வேர்மகள்........ 18

ஆக்ஸ்போர்டு ஆங்கில அகராதி உருவான கதை........ 19

பழந்தமிழகத்தில் தேர்தல்
அன்று ஒழுக்கமே தேர்தலின் மகுடம்........ 20

மீண்டும் சூடுபடுத்திச் சாப்பிடவே கூடாத
8 உணவுகள் பற்றித் தெரிந்து கொள்வோம்........ 22

எதைச் சாப்பிடவேண்டும் என
யாரையும் கட்டாயப்படுத்த முடியாது........ 23

உணவு விடுதிகளில் என்ன நடக்கிறது........ 24

காசுமீர் கற்றுக் கொடுத்த பாடம்
– மருத்துவர் க.பொருநை........ 26

ஊர் எல்லாம் நம்ம ஊரே
– பாவலர் மு. இராமச்சந்திரன்........ 29

மாணவி அனிதா தற்கொலையும்
சமூகநீதி கொலையும்
– கவிபாஸ்கர்........ 31

காசோலை, வரைவோலை
அனுப்புவோர் "mutram" என்ற பெயருக்கு
எடுத்தனுப்பலாம்.



மேட்டூர் அணையில் இருந்த நீர் ஆவியாவதைத் தடுக்க, தெர்மாகோல் அட்டைகளை தண்ணீர்மேல் போட்ட அறிவாளிகளின் அடுத்த அறிவாளித்தன மான செயல் எல்லோரும் அசல் ஓட்டுநர் உரிமத்தை எப்போதும் தங்களுடனேயே வைத்துக் கொள்ள வேண்டும் என்பது. இந்த வரிசையில் இன்னும் பல சட்டங்கள் திட்டங்கள் வரலாம்.

போக்குவரத்து காவல்துறையில் இருக்கிற ஒரு சிலர், ஏதாவது ஒரு காரணத்தைச் சொல்லி வண்டி ஓட்டிகளிடம் கையூட்டு வாங்குவது என்பது வாடிக்கையான ஒரு நிகழ்வாக இருக்கிறது. அப்படிப்பட்டவர்களுக்கு, எளிதான வழியாக இச்சட்டத்தை கொண்டு வந்திருக்கிறது தமிழக அரசு. பல நேரங்களில் வண்டி ஓட்டிகளிடம் உரிமத்தை வாங்கிக் கொண்டு கையூட்டுக் கொடுத்தால்தான் உரிமம் தருவோம் என்றும், வண்டிச் சாவியை பிடுங்கி வைத்துக் கொண்டு, கையூட்டுக் கொடுத்தால்தான் சாவி தருவோம் என்று பல இடங்களில் சில காவல்துறையினர் நடந்து கொள்வதை நாம் காண்கிறோம்.

இச்சட்டத்தின் மூலம் உரிமத்தை சோதிக்கிறேன் என்று, அசல் உரிமத்தை வாங்கி, அதை மறைத்து வைத்துக்கொண்டு, மறுபடியும் வண்டி ஓட்டிகளிடம் உரிமம் எங்கே என்று கேட்கிற நிகழ்வுகளுக்கு இனி பஞ்சமிருக்காது. கையூட்டுக் கொடுத்தால் தான் உரியவர் கைக்கு அசல் ஓட்டுநர் உரிமம் கிடைக்கும்.

அசல் உரிமம் தொலைந்து விட்டால், மிக எளிதான முறையில் உரிமம் பெறுவதற்கான வழிகள் இங்கே இருக்கிறதா என்றால், இல்லை. பல நாட்கள் காத்திருக்க வேண்டும். அதுவரை வண்டி ஓட்டாமல் இருக்க வேண்டும். போக்குவரத்து உரிமம் வழங்கும் இடத்தில் கூட கையூட்டு என்பது இருந்து கொண்டுதான் இருக்கிறது. அங்கேயும் பணம் கொடுத்து அழ வேண்டும்.



# அசல் ஓட்டுநர் உரிமம்?

*மகிழுந்து ஓட்டும் வேலைக்குச் செல்லும் ஓட்டுநர்களிடம், வண்டிகளின் உரிமையாளர்கள் அசல் ஓட்டுநர் உரிமத்தை வாங்கி வைத்துக் கொள்வது இதுநாள்வரை வழக்கமாக இருக்கிறது. காரணம் அந்த ஓட்டுநர் ஏதாவது தவறு செய்துவிட்டால், இந்த அசல் உரிமம் ஒரு பிடிப்பாக, பிணை பொருளாக இருக்கும் என்பதால். ஓட்டுநர்களும் நமது அசல் உரிமம் முதலாளியிடம் இருக்கிறது என்று கவனமாக செயல்படுவார்கள். இனி அந்நிலை மாறும்.*

*ஓட்டுநர்களிடம் கண்டிப்பாக அசல் உரிமம் இருக்க வேண்டும். தவறான எண்ணமுடைய ஓட்டுநர்கள் எதை வேண்டுமானாலும் செய்து விட்டு ஓடிவிடக்கூடிய நிகழ்வும் இனி நடக்கும்.*

*இதுபோன்று பல சிக்கல்களுக்கு பாதை போட்டிருக்கிறார் போக்குவரத்துத்துறை அமைச்சர். ஒரு மனிதனின் மொத்த விபரங்களும், ஒரு சொடுக்கில் திரையில் தெரிகின்ற அளவிற்கு வளர்ந்திருக்கிற அறிவியல் உலகில் இப்படியொரு சட்டம் தேவையா? ஓட்டுநர் உரிமத்தில் தில்லு முல்லு செய்திருக்கிறார்களா என்பதை கண்டு பிடிக்க இணையம் மூலம் எதுவும் செய்யக்கூடாதா? மக்களை துன்பப்படுத்த வேண்டும் என்ற நோக்கிலேயே சட்டங்கள் இயற்றப்படுகிறதோ என்று நினைக்கத் தோன்றுகிறது.*

*மழை பொழிகிறது. மழைநீர் ஆறாக ஓடி கடலில் வீணாகப் பாய்கிறது. தமிழ்நாடு குடிநீர், நிலத்தடி நீர் தட்டுப்பாட்டால் வெந்து கொண்டிருக்கிறது. தண்ணீரைச் சேமிக்க அணைகள் கட்டக்கூடாதா, அதற்கொரு திட்டம், சட்டம் போடக்கூடாதா?*

*காமராசருக்குப் பிறகு வந்த அரசுகளுக்கு தொலைதூரப் பார்வையே இல்லாமல் போய் விட்டதே, காரணம் என்ன? காசுக்கு வாக்களிக்கும் கூட்டம் தான். மக்கள் மாற வேண்டும். அரசை கேள்வி கேட்க வேண்டும். இன்றியமையாத தேவைகளுக்கு முன்னுரிமை கொடுக்கும் அரசை தேர்ந்தெடுக்க வேண்டும்.*

*நாட்டின் வளர்ச்சியும், நாட்டின் இயற்கை வளங்கள் உயர்வும் பொதுமக்கள் எடுக்கும் முடிவுகளின் அடிப்படையில்தான் உள்ளன.*

**மலேசியாவில் நடைபெற்ற தனித் தமிழியக்க மாநாட்டில் வெளியிடப்பட்ட நுட்பவியல் கலைச் சொற்கள்**

1. WhatsApp - புலனம்
2. youtube - வலையொளி
3. Instagram - படவரி
4. WeChat - அளாவி
5. Messanger - பற்றியம்
6. Twtter - கீச்சகம்
7. Telegram - தொலைவரி
8. skype - காயலை
9. Bluetooth - ஊடலை
10. WiFi - அருகலை
11. Hotspot - பகிரலை
12. Broadband - ஆலலை
13. Online - இயங்கலை
14. Offline - முடக்கலை
15. Thumb drive - விரலி
16. Hard disk - வன்தட்டு
17. GPS - தடங்காட்டி
18. cctv - மறைகாணி
19. OCR - எழுத்துணரி
20. LED - ஒளிர்விமுனை
21. 3D - முத்திரட்சி
22. 2D - இருதிரட்சி
23. Projector - ஒளிவீச்சி
24. printer - அச்சுப்பொறி
25. scanner - வருடி
26. smart phone - திறன்பேசி
27. Simcard - செறிவட்டை
28. Charger - மின்னூக்கி
29. Digital - எண்மின்
30. Cyber - மின்வெளி
31. Router - திசைவி
32. Selfie - தம் படம்
33. Thumb nail - சிறுபடம்
34. Meme - போன்மி
35. Print Screen - திரைப் பிடிப்பு
36. Inkjet - மைவீச்சு
37. Laser - சீரொளி

**தமிழ் இனி மெல்லச் சாகும் என்று இனி எவனும் சொல்லக்கூடாது.**




# தனி நபர் ரகசியம் காப்பது அடிப்படை உரிமை

மத்திய அரசின் பல்வேறு நல திட்டங்களின் பலன்களை பெற ஆதார் எண் கட்டாயம் ஆக்கப்பட்டு உள்ளது.

சமையல் கியாஸ் மானியம் போன்ற பல்வேறு மானியங்களை பெறுவதற்கும், செல்போன் இணைப்பு பெறுவது, வங்கி கணக்கு தொடங்குவது, வருமான வரி தாக்கல் செய்வது, பான் அட்டை போன்ற பல்வேறு திட்டங்களக்கும் ஆதார் எண்ணை கட்டாயம் தாக்கல் செய்ய வேண்டும்.

ஆதார் அட்டைக்காக தனிநபர்களின் கைரேகை, கருவிழிப் படலப் பதிவு போன்ற தகவல்களை சேகரிப்பது அவர்களுடைய அடிப்படை உரிமையை மீறும் செயல் என்றும், அந்தத் தகவல்கள் தவறாக பயன்படுத்தப்பட வாய்ப்பு இருப்பதாகவும் குற்றச்சாட்டு எழுந்தது.

இது தொடர்பாக கர்நாடக ஐகோர்ட்டின் முன்னாள் நீதிபதி கே.எஸ்.புட்டசாமி, குழந்தைகள் உரிமைக்கான தேசிய கமிஷன் தலைவர் சாந்தா சின்கா, பெண்ணியவாதி கல்யாணி சென் மேனன் உள்ளிட்டோர் சுப்ரீம் கோர்ட்டில் வழக்கு தொடர்ந்தனர்.

இது தொடர்பாக அவர்கள் தாக்கல் செய்த மனுக்களில், ஆதார் அட்டைக்காக தகவல்கள் பெறுவது அரசியல் சாசனம் வழங்கியுள்ள தனிமனிதர்களின் அந்தரங்கம் தொடர்பான உரிமைக்கு எதிரானது என்று கூறி இருந்தனர்.

முதலில் இந்த வழக்கை தலைமை நீதிபதி ஜே.எஸ்.கேஹர் தலைமையிலான 5 நீதிபதிகள் அமர்வு விசாரித்தது.

பின்னர் அந்த அமர்வு, இந்த வழக்கு விசாரணையை தலைமை நீதிபதி ஜே.எஸ்.கேஹர் தலைமையிலான 9 நீதிபதிகள் அடங்கிய அரசியல் சாசன அமர்வுக்கு மாற்றி உத்தரவிட்டது. அப்போது, உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடான இந்தியாவில் ஒருவரின் அந்தரங்க உரிமை என்பது அடிப்படை மனித உரிமையா? இது அரசியல் சாசன கட்டமைப்பின் ஒரு அங்கமா? என்பது குறித்து இந்த 9 நீதிபதிகள் அடங்கிய அமர்வு விசாரித்து முடிவு எடுக்கும் என்று அறிவித்தது.

அதன்படி, தலைமை நீதிபதி ஜே.எஸ்.கேஹர் தலைமையில் நீதிபதிகள் ஜே.செல்லமேஸ்வர், எஸ்.ஏ.பாப்டே, ஆர்.கே.அகர்வால், பாலி நாரிமன்,

ஏ.எம்.ச.பரே, டி.ஒய்.சந்திரசூட், எஸ்.கே.கவுல், எஸ்.அப்துல் நசீர் ஆகியோர் அடங்கிய அமர்வு இந்த வழக்கை விசாரித்து வந்தது.

இந்த அமர்வின் முன் அட்டார்னி ஜெனரல் கே.கே.வேணுகோபால், கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல் துஷார் மேத்தா, மூத்த வக்கீல்கள் அரவிந்த் தட்டார், கபில் சிபல், கோபால் சுப்பிரமணியம், சியாம் திவான், ஆனந்த் குரோவர், சி.ஏ.சுந்தரம், ராகேஷ் திவிவேதி உள்ளிட்டோர் ஆஜராகி வாதிட்டனர்.

மத்திய அரசின் சார்பில் ஆஜராகி வாதிட்ட வக்கீல்கள், அந்தரங்கங்கள் என்பது அடிப்படை உரிமையின் கீழ் வராது என்று வாதத்தை முன்வைத்தனர். அரசியல் சாசனத்தை உருவாக்கியவர்கள் அனைத்து அடிப்படை உரிமைகளையும் குடிமக்களுக்கு வழங்கி இருப்பதாகவும், ஆனால் அந்தரங்க உரிமை உணர்வுப்பூர்மாக தவிர்க்கப்பட்டு இருப்பதாகவும் அவர்கள் கூறினார்கள்.

மனுதாரர்கள் தரப்பில் ஆஜரான வக்கீல்கள் வாதாடுகையில், ஆதார் அட்டைக்காக ஒருவரின் கட்டை விரல் ரேகை மற்றும் பல அந்தரங்க தகவல்கள் சேகரிக்கப்படுகின்றன.

இவை அனைத்தும் சில வணிக நிறுவனங்களின் பயன்பாட்டில் வரும்போது அந்த நபரின் அந்தரங்க உரிமை பாதிக்கப்படுகிறது என்று கூறினார்கள்.

வழக்கு விசாரணையின் போது, மக்களின் தனிப்பட்ட தகவல்களை சில நேரங்களில் பகிரங்கமாக வெளியிடாமல் தவிர்க்கலாம் என்றும், அதற்காக அத்தகைய விவரங்களை எதற்காகவும் அரசு திரட்டக்கூடாது என்று கூறுவது ஏற்புடையது அல்ல என்றும் நிதிபதிகள் கருத்து தெரிவித்தனர்.

அனைத்துத் தரப்பு வாதங்களும் முடிவடைந்த நிலையில், கடந்த 3ஆம் தேதி தீர்ப்பு ஒத்திவைக்கப்பட்டது.

மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த இந்த வழக்கில் 9 நீதிபதிகள் அடங்கிய அரசியல் சாசன அமர்வு தனது 547 பக்கங்கள் கொண்ட தீர்ப்பை வழங்கியது. ஒருதனிப்பட்ட நபரின் அந்தரங்கத்தை பாதுகாக்கும் அடிப்படை உரிமையை அரசியல் சாசனம் வழங்கி இருக்கிறது என்ற வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தீர்ப்பை 9 நீதிபதிகளும் ஒருமனதாக வழங்கினார்கள்.

இதன்மூலம், தனிநபர் ரகசியம் என்பது அடிப்படை உரிமை அல்ல என்ற மத்திய அரசின் வாதத்தை சுப்ரீம் கோர்ட்டு நிராகரித்து உள்ளது. தலைமை நீபிதி ஜே.எஸ்.கேஹர் தீர்ப்பின் முக்கிய அம்சங்களை வாசித்தார். அப்போது, சில நீதிபதிகளை தனிப்பட்ட முறையில் சில கருத்துகளை தெரிவித்து இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஒருவரின் அந்தரங்கம் என்பது அவருடைய வாழ்க்கையின் உள்ளார்ந்த பகுதி ஆகும். அரசியல் சாசனத்தின் 21வது பிரிவின் கீழ் ஒருவரின் அந்தரங்கம், அதாவது தனிமனித ரகசியம் பாதுகாக்கப்படுகிறது. அந்தரங்கம் என்பது தனிமனித சுதந்திரத்தின் கீழ் வருவது ஆகும். தனி மனித சுதந்திரம் வாழ்வதற்கான உரிமை மற்றும் சுதந்திரத்தின் அடிப்படையில் வருகிறது.

இந்துப் பிரச்சினை தொடர்பாக கடந்த 1954ஆம் ஆண்டு எம்.பி.சர்மா வழக்கில் 6 நீதிபதிகள் வழங்கிய தீர்ப்பிலும், பின்னர் 1961ஆம் ஆண்டு கரக்சிங் வழக்கில் 8 நீதிபதிகள் வழங்கிய தீர்ப்பிலும் அந்தரங்கம் என்பது அரசியல் சாசனத்தில் வழங்கப்பட்டுள்ள அடிப்படை உரிமையின் கீழ் வராது என்று கூறப்பட்டதை ஏற்க முடியாது. இவ்வாறு நீதிபதிகள் தங்கள் தீர்ப்பில் கூறி உள்ளனர்.

நிதிபதி ஏ.எம்.சப்ரே தனிபட்ட முறையில் தீர்ப்பில் சில கருத்துகளை தெரிவித்து உள்ளார். அவர் கூறி இருப்பதாவது:

குடிமக்கள் ஒவ்வொருவருக்கும் தங்கள் அந்தரங்கத்தை பாதுகாப்பதற்கான அடிப்படை உரிமை இருப்பதை அரசியல் சாசனத்தின் 3வது பிரிவு அங்கீகரித்து உள்ளது. சாதி, மதம், இனம் போன்ற பாகுபாடுகள் இன்றி ஒவ்வொருவரும் கண்ணியமாக வாழும் உரிமை சட்டத்தின் ஆட்சி நடைபெறும் சமுதாயத்தில் வழங்கப்பட்டு உள்ளது. இந்த உரிமையை அரசியல் சாசனம் வழங்கி இருக்கிறது.

ஆனால் இந்த ஒட்டுமொத்த உரிமையும் சில நியாயமான கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டது என்பதையு ஒதுக்கிவிட முடியாது. சட்டத்துக்கு உட்பட்டு சமூக, தார்மீக மற்றும் பொதுநலன் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு சில நியாயமான கட்டுப்பாடுகளை விதிக்கும் அதிகாரம் அரசுக்கு உள்ளது. இவ்வாறு அவர் கூறி உள்ளார். ●

# 40 வகை கீரைகளும் அதன் முக்கியப் பயன்களும்

அகத்திக்கீரை – ரத்தத்தை சுத்தமாக்கி பித்தத்தைத் தெளியவைக்கும்.

காசினிக்கீரை – சிறுநீரகத்தை நன்கு செயல்பட வைக்கும். உடல் வெப்பத்தைத் தணிக்கும்.

சிறுபசலைக்கீரை – சருமநோய்களைத் தீர்க்கும் பால்வினை நோயை குணமாக்கும்.

பசலைக்கீரை – தசைகளை பலமடையச் செய்யும்.

கொடி பசலைக்கீரை – வெள்ளை விலக்கும், நீர்க் கடுப்பை நீக்கும்.

மஞ்சள் கரிசலை – கல்லீரலை பலமாக்கும், காமாலையை விலக்கும்.

குப்பைக்கீரை – பசியைத்தூண்டும், வீக்கத்தை வத்தவைக்கும்



அரைக்கீரை – ஆண்மையைப் பெருக்கும்.

புளியங்கீரை – சோகையை விலக்கும், கண்நோயை சரியாக்கும்.

பிண்ணாருக்குக்கீரை – வெட்டையை, நீர்க்கடுப்பை நீக்கும்.

பரட்டைக்கீரை – பித்தம், கபம் போன்ற நோய்களை விலக்கும்.

பொன்னாங்கன்னிக் கீரை – உடல் அழகையும், கண் ஒளியையும் அதிகரிக்கும்.

சுக்கா கீரை – ரத்த அழுத்தத்தை சீர்செய்யும், சிரங்கு, மூலத்தைப் போக்கும்.

வெள்ளை கரிசலைக்கீரை – ரத்தசோகையை நீக்கும்.

முருங்கைக்கீரை – நீரிழிவை நீக்கும், கண்கள், உடல் பலம்பெறச் செய்யும்.

வல்லாரைக் கீரை – மூளைக்குப் பலம் தரும்.



முடக்கத்தான் கீரை – கை, கால் முடக்கம் நீக்கும், வாயு விலகும்.

புண்ணக்கீரை – சிரங்கும், சீதளமும் விலக்கும்.

புதினாக்கீரை – ரத்தத்தை சுத்தம் செய்யும் அஜீரணத்தைப் போக்கும்.

நஞ்சு முண்டான் கீரை – நஞ்சு முறிக்கும்.

தும்பைக்கீரை – அசதி, சோம்பல் நீக்கும்.

முரங்கைக்கீரை – சளி, இருமலை துடைத்தெரியும்

முள்ளங்கிக்கீரை – நீரடைப்பு நீக்கும்.

பருப்புகீரை – பித்தம் விலக்கும், உடல் சூட்டை தணிக்கும்.

புளிச்சக்கீரை – கல்லீரலைப் பலமாக்கும், மாலைக்கண் நோயை விலக்கும், ஆண்மை பலம் தரும்.

மணலிக்கீரை – வாதத்தை விலக்கும், கபத்தைக் கரைக்கும்.

மணத்தக்காளிக் கீரை – வாய் மற்றும் வயிற்றுப்புண்களை குணமாக்கும், தேமல் போக்கும்.

முளைக்கீரை – பசியை ஏற்படுத்தும், நரம்பு பலமடையச் செய்யும்.

சக்கரவர்த்திக் கீரை – தாது விருத்தியாகும்.

வெந்தயக் கீரை – மலச்சிக்கல் நீக்கும், மண்ணீரல், கல்லீரலை பலமாக்கும். வாத, காச நோய்களை விலக்கும்.

தூதுவலை – ஆண்மை தரும். சருமநோயை விலக்கும். சளித்தொல்லையை நீக்கும்.



தவசிக்கீரை – இருமலைப் போக்கும்.

சாணக்கீரை – காயம் ஆற்றும்

வெள்ளைக்கீரை – தாய்ப்பாலை பெருக்கும்.

விழுதிக்கீரை – பசியைத்தூண்டும்

கொடிகாசினிக்கீரை – பித்தம் தணிக்கும்

துயிளிக்கீரை – வெள்ளை, வெட்டை விலக்கும்.

துத்திக்கீரை – வாய், வயிற்றுப்புண் அகற்றும். வெள்ளை, மூலம் விலக்கும்.

காரகொட்டிக்கீரை – மூலநோயை போக்கும். சீதபேதியை நிறுத்தும்

மூக்கு தட்டைக்கீரை – சளியை அகற்றும்

நருதாளிக்கீரை – ஆண்மையைப் பெருக்கும்

# ஆலந்தூர் கோ.மோகனரங்கன் வாழ்க்கைக் குறிப்புகள்



பிறந்தநாள்: 1.6.1942 அகவை 75 தொடக்கம்

இடம் : ஆலந்தூர், சென்னை 600 016

பெற்றோர் : கோ. மீனாம்பாள், மா.கோபால்

கல்வித்தகுதி: புலவர் (சென்னை பல்கலைக் கழகம்) எம்.ஏ.(தமிழ்) அஞ்சல் வழிக் கல்வி (சென்னை பல்கலைக்கழகம்) பி.எச்.டி.(பச்சையப்பர் ஆண்கள் கல்லூரி) சென்னைப் பல்கலைக்கழகம்

பணி: நூலகர் (ஓய்வு) காஞ்சி மாவட்ட நூலக ஆணைக்குழு தமிழ்நாடு அரசு நூலகத்துறை.

சிறப்புத் தகவல்கள்:

சென்னைத் தியாகராயர் நகர் உயர்நிலைப் பள்ளியில் பத்தாம் வகுப்பில் படிக்கும் போதே. புதிய பாதை என்னும் கையெழுத்து இலக்கிய ஏட்டின் ஆசிரியராக இருந்து தமிழ்ப் பணியைத் தொடங்கியவர். பள்ளி இலக்கிய மன்றத்தின் செயலாளராகவும் விளங்கியதோடு சென்னை மாநகரப் பள்ளி மாணவர் பேச்சுப் போட்டியில் வென்று அன்றைய மாநில ஆளுநர் ஸ்ரீ பிரகாசா அவர்களிடம் பரிசு பெற்றார். தியாகராயர் நகர் இராமகிருஷ்ணன் உயர்நிலைப்பள்ளி நடத்திய பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்று அன்றைய மாநில ஆளுநர் ஜான் அவர்களிடமும் பரிசு பெற்றார்.

அகவை பதினெட்டில் நூலகப் பணியில் சேர்ந்தார். பணி செய்து கொண்டே படித்து, புலவர், பிலிட்.எம்.ஏ முதலிய கல்வித் தகுதிகளைப் பெற்றார். தம் 45ஆம் அகவையில் மூன்றாண்டுகள் ஊதியம் இல்லா விடுமுறை மேற்கொண்டு பச்சையப்பர் கல்லூரியில் முழு நேர பி.எச்.டி. ஆய்வு மாணவராகச் சேர்ந்தார். தமிழ்க் கவிதைகளில் சந்த அமைப்பு வண்ணச்சரபம் தண்டபாணி அடிகளார் சிறப்பாய்வு என்னும் தலைப்பில் பேராசிரியர் முனைவர். இரா.குமரவேலனார் அவர்களை நெறியாளராகக் கொண்டு சென்னைப் பல்கலைக் கழகத்தில் முனைவர் பட்டம் பெற்றார். ஆய்வேடு நானூறு பக்க அளவில் நூலாக வெளிவந்த போது

அறிஞர் சிலம்பொலி செல்லப்பனார் அவர்கள், ஆய்வறிஞர் என்று முத்தமிழ்க் கவிஞரைப் பாராட்டி மகிழ்ந்தார்.

ஆலந்தூரில் கவிதை வட்டம் என்னும் இலக்கிய அமைப்பினை நடத்தி, தமிழகம் எங்கும் உள்ள இளங்கவிஞர்கள் கலந்து கொள்ளுமாறு பல பரிசுக் கவியரங்கங்கள் ஏற்பாடு செய்து கவிதை இலக்கியம் வளரப் பாடுபட்டவர்.

**பதிப்புப் பணி:**

நூறாண்டுகளுக்குப் முன்பு வெளிவந்த பழைமை வாய்ந்த தமிழ் இலக்கிய இலக்கணங்களை மீண்டும் பதிப்பித்துக் கொண்டு வருதல். அவ்வாறு வந்தவை ஆறுமுக நாவலர், யாழ்ப்பாணத்துச் சுன்னாகம் குமாரசுவாமிப் புலவர், பரிதிமாற் கலைஞர், அரசஞ் சண்முகனார் ஆகியோர் நூல்கள் குறிப்பிடத் தக்கவை. மேலும் பேரறிஞர் அண்ணா அவர்கள் 1942 முதல் எழுதிய கட்டுரைகளைத் தொகுத்து முதல்முறையாக நூல் வடிவில் 22 தொகுப்புகளாக வெளிக்கொண்டு வந்தது குறிப்பிடத்தக்கது.

மறைமலையடிகள், மயிலை சீனி வேங்கடசாமி, பன்மொழிப் புலவர் கா.அப்பாத்துரையார் மற்றும் பல அறிஞர்களின் சிறந்த நூல்களை மீண்டும் அச்சில் கொண்டு வந்து இன்றைய இளைஞர்கள் படிக்க வாய்ப்பளித்தது.

**பெற்ற விருதுகள்:**

1. பாவேந்தர் நூற்றாண்டு விழா நிறைவில் ஆளுநர் ஆட்சியில் தமிழக அரசு வழங்கிய பாவேந்தர் விருது.

2. வி.ஜி.பி. தமிழ்ச் சங்கம் வழங்கிய வி.ஜி.பி.விருது.

3. 15.11.1999 அன்று குழந்தை எழுத்தாளர் சங்கம் அளித்த குழந்தை இலக்கிய மாமணி என்னும் விருது.

4. 10.4.1993 அன்று வாணுவம் பேட்டை திருவள்ளுவர் இலக்கிய மன்றம் நல்கிய இலக்கிய ஆய்வுச் சுடர் என்னும் விருது.

5. வங்கனூர் உயர்நிலைப் பள்ளியில் தமிழறிஞர்கள் கூடி அளித்த விருது முத்தமிழ்க் கவிஞர் விருது ஆகும்.

6. தமிழ்க் கவிஞர் பெருமன்றத்தின் சார்பில் அறிஞர் நாரண.துரைக்கண்ணன் அவர்கள், கவிவேந்தர் என்னும் விருதளித்தார்.

(அடுத்த இதழில்)

# பெண்கள் அணியும் ஆபரணங்களின் பயன்கள்!



**தோடு**

மூளையின் செயல்திறன் அதிகரிக்கும் கண்பார்வை திறன் கூடும்.

**நெற்றிச்சுட்டி**

நெற்றிச்சுட்டி அணியும் போது தலைவலி, சைனஸ் பிரச்சனைகள் குணமாகும்.

**செயின், நெக்லஸ்**

கழுத்தில் செயின் அணியும் போது உடலுக்கும் தலைக்கும் இடையே உள்ள இரத்த ஓட்டம் சீராகும்.

**லம்பாடி வளையல்கள் (நாடோடி பெண்கள்)**

பெண்களுக்கு மார்பக புற்று நோய் வருவது இல்லை. காரணம் மணிக்கட்டில் இருந்து முழங்கைக்கு மேல்வரை நெருக்கமாக வளையல்களை அணிவதால்...மார்பு பகுதியின் இரத்த ஓட்டம் சீராக இருக்கும்.

**வளையல்**

வளையல்கள் அந்தப் பகுதியின் புள்ளிகளை அழுத்துவதன் மூலம் வெள்ளையணு உற்பத்தி உடலில் அதிகரிக்கிறது. முக்கியமான ஹார்மோன்கள் சுரப்பும் ரெகுலேட் செய்யப்படுகிறது.

இதன் மூலம் தாய்க்கும் சேய்க்கும் நோய் எதிர்பாற்றல் கூடும்.

**ஒட்டியாணம்**

ஒட்டியாணம் அணியும்போது இடுப்புப் பகுதியின் இரத்த ஓட்டம் நன்றாக தூண்டப்பட்டு ஆரோக்கியம் கூடும். வயிற்றுப் பகுதிகள் வலுவடையும்.

**மூக்குத்தி**

மூக்கில் இருக்கும் சிலபுள்ளிகளுக்கும் பெருங்குடல் மற்றும் சிறுகுடலுக்கும் நெருக்கமான தொடர்பு உண்டு..அந்தப் புள்ளிகள் தூண்டப்படும் போது அது சம்மந்தமான நோய்கள் குணமாகும்.

**கொலுசு**

கல்லீரல், மண்ணீரல், பித்தப்பை, சிறுநீரகம், சிறுநீர்ப்பை, வயிறு போன்ற மிக முக்கிய உறுப்புகளின் செயல்திறனை தூண்டிவிடும் அற்புதமான அணிகலன்

# அனைத்திலும் தமிழ் இருந்தது அடிமையாட்சி! சுத்தமாகத் தமிழ் இல்லை சுதந்திர ஆட்சியா?

வெள்ளையர் ஆண்டபோது ஒரு பைசாவிலிருந்து ஒரு ரூபாய் வரை அத்தனை நாணயங்களிலும் தமிழ் இருந்தது. ரூபாய் நோட்டுகளிலும் தமிழ் பளிச்சென்றிருந்தது. அதை அடிமையாட்சி என்றார்கள்.

இப்போது எந்த நாணயத்திலும் தமிழ் துப்புரவாக இல்லை. ரூபாய் நோட்டுகளிலோ பூதக்கண்ணாடி போட்டுத்தான் தமிழைத் தேட வேண்டிய நிலை. இது சுதந்திர ஆட்சியாம்!

அது சரி, வெள்ளைக்காரன் காலத்தில் ஒரு நாணயத்தின் வடிவைக்கொண்டே அதன் பெறுமதியைத் தெரிந்து கொள்ளலாம். இந்த நாணயம் கெட்ட ஆட்சியிலோ, அதிலே பொறிக்கப் பட்டிருக்கிற எண்ணை பார்த்துத்தான் அதன் பெறுமதியைக் கண்டு பிடிக்க வேண்டிய பரிதாப நிலை.

பார்வைக் குறைவுடைய கிழடு கட்டைகள், படிப்பறிவில்லாதவர்கள், பார்வையற்றோர் போன்றவர்கள் அதனால் படும் தொல்லை கொஞ்ச நஞ்சமல்ல.

ஒரு ரூபாய் என்று நினைத்து 5 ரூபாயைக் கொடுத்து விட்டு ஏமாறும் நிலை.

தடவிப் பார்த்து நாணயத்தின் பெறுமதியைக் கண்டுபிடிக்க வேண்டிய கட்டாயநிலை.

இது சரிதானா?

கையிலே வாங்கியவுடனேயே இது இவ்வளவு மதிபுள்ளது என்று கண்டு கொள்ளும் வண்ணம் நாணயங்களை வடிவமைத்தால் என்ன?

ரூபாய் நோட்டுக்களிலும் அந்த அளவீட்டு முறையை ஏன் கடைப்பிடிக்கக் கூடாது?

தமிழ்நாட்டு நாணயங்களிலும் ரூபாய் நோட்டுகளிலும் தமிழ் இடம்பெறும்படி ஏன் செய்யக்கூடாது?

உலகமெங்கும் புழங்குகிறது என்பதற்காக உலகமெல்லாம் ஒரே நாணயமாகவா இருக்கிறது?

நாட்டுக்கு நாடு வேறுபடுகிறது தானே? இந்திய மாநிலங்களிடையே அப்படி ஏன் இருக்கக்கூடாது?

வெள்ளையராட்சியில் தமிழ் எப்படி இருந்தது? இப்போது தமிழ் காணாமல்போன காரணமென்ன?

இந்திமயம்தான் சுதந்திரமென்றால், அது தமிழ்த் தேசியத்தை, தாய்மொழி வழித் தேசியங்களை இழிவுபடுத்துவதே ஆகும்.

இதை எப்படி சுதந்திரம் என்று சொல்லமுடியும்?

*(இராமதாசர் விழாவில் அறிஞர் அருகோ அவர்கள் பேசியதிலிருந்து).*





# திரைத்தேரில் பவனி வரும் பாடகர் பவன்

"உன் ரெட்ட சட கூப்பிடுது முத்தம்மா" என்று தொடங்கும் பாடல் தற்போது பட்டிதொட்டி களிலெல்லாம் ஒலித்துக் கொண்டிருக்கிறது. திரு. எஸ்.பி.ராஜ்குமார் அவர்கள் இயற்றிய பாடல். இப்பாடல் இடம்பெற்ற படமான "பாக்கணும் போல இருக்கு" திரைப்படத்தை இயக்கியவரும் இவரே. இசையமைத்தவர் அருள்தேவ் அவர்கள். தரமான இசையமைப்பாளர்கள் என்ற வரிசையில் தமிழுலகில் அருள்தேவுக்கும் இடமுண்டு. இப்படத்தில் எல்லா பாடல்களும் சுவைஞர்களால் விரும்பப் படுகிறது என்றாலும் "உன் ரெட்ட சட கூப்பிடுது முத்தம்மா" என்ற பாடலை விரும்புகிற வர்களின் எண்ணிக்கை அதிகமாகிக் கொண்டே இருக்கிறது. இப்பாடலுக்கு குரல் தந்திருப்பவர் மண்ணின் மைந்தர் திரு. பவன் அவர்கள்.

திரு. பால் அகஸ்டின் அவர்களது வழிநடத்து தலின் மூலமாக, மேற்கத்திய இசையில் எட்டு படிநிலைகளில் தேறியவர்.

கர்நாடக இசையை முறைப்படி சங்கீத் வித்வத் சபையில் நான்காண்டுகள் படித்துத் தேறியவர். இளையராஜா, ஏ.ஆர்.ரகுமான், ஹாரிஸ் ஜெயராஜ், டி. இமான், வித்யாசாகர், தேனிசைத்தென்றல் தேவா, தென்றல் இசை இளவல் ஸ்ரீகாந்த் தேவா, சரத் போன்ற முன்னணி இசைய மைப்பாளர்களிடம் குழுப்பாடகராக பணியாற்றி பெயர் பெற்றவர்.

*பல மேடை நிகழ்வுகளில் பாடல் களைப் பாடி இசை ஆர்வலர்கள் மத்தியல் நற்பெயர் பெற்றவர்.*

*இசையமைப்பாளர் திரு. அருள்தேவ் அவர்களது இசையில் போட்டா போட்டி என்ற திரைப்படத்திலும் பாண்டியநாடு என்ற திரைப்படத்தில் இசையமைப்பாளர் திரு. டி. இமான் அவர்களது இசையில் அந்தாணிதாசுடன் சேர்ந்து ஒரு பாடலும், இசையமைப்பாளர் திரு. உதயா அவர்களது இசையில், அப்புக்குட்டி நடித்த மண்ணாரு என்ற திரைப்படத்திலும் பாடியிருக் கிறார்.*

*கத்துக்குட்டி என்ற படத்தில் "ஒரு ரவுண்டு தண்ணி ஊத்து" என்ற பாடலையும் பாடியிருக் கிறார். இப்பாடலுக்கு இசையமைத்தவர் திரு. அருள்தேவ் ஆவார்.*

*பக்திப் பாடல்களையும், தனிப்பட்ட பாடல்களையும் மிகச்சிறப்பாகப் பாடிக் கொண்டிருக்கிறார். எந்தவிதமான பாடலாக இருந்தாலும் பவன் பாடுவார் என்ற நிலையை இசையமைப்பாளர்களின் சிந்தைக்கு கொண்டு வந்திருக்கிறார். அத்துடன் நேரம் தவறாமை என்ற ஒரு இயல்பும் இவருக்கு சிறப்புச் சேர்க்கிறது.*

*இசையமைப்பாளர் திரு. பாபி இசையில், நடிகர் திரு. பரணி நடித்த கன்னக்கோல் என்ற படத்திலும் திரு. ஜித்தேஷ் அவர்களது இசையில் சந்தித்தவேளை என்ற திரைப்படத்திலும் திரு. ராஜயோகி இசையமைத்த துரியோதனன் என்ற படத்திலும் பாடியிருக்கிறார்.*

*இசையமைப்பாளர்கள் தரும் மெட்டுகளுக்கு இசைக்குறிப்புகள் எழுதிக்கொண்டு, இசையமைப் பாளர்களின் கற்பனைகளுக்கு குரல் கொடுத்து வருகிறார் பவன்.*

*திரைப்பட பின்னணிப் பாடகர் திரு. பவன் அவர்களது குரலில் வெளிவரும் பாடல்கள் அனைத்தும் மக்களால் வரவேற்கப்படுகிற மகிழ்ச்சி யான தருணத்தில், வெளிநாடுகளில் இருந்து மேடைப்பாடல் நிகழ்வுக்கு அழைப்புகள் வந்து கொண்டிருப்பதையும் நாம் அறிய முடிந்தது. வெற்றிகள் குவிக்க, நாமும் மனதார வாழ்த்துவோம்!*



# காளமேகத்தின் கவித்திறன்

சிலேடைக் கவி காளமேகத்தைத் தெரியாதவர்கள் இருக்க மாட்டார்கள். அவர் பாடல்கள் மிகச் சுவையுடன் இருக்கும். படிக்கப் படிக்கத் தெவிட்டாதவை. இகழ்ந்து பாடுவார்: உரியவர் கேட்டால் புகழ்ந்து தானே பாடினேன் என்று பொருள் கூறி விளக்குவார். அத்துணை தமிழ்ப் புலமை மிக்கவர்.

இவருடைய திறமையை, அதிவீரராமபாண்டியரைத் தலைவராகக் கொண்ட புலவர்கள் ஏற்கவில்லை. காளமேகத்திடம் பலவிதத் தலைப்புகளைக் கொடுத்துப் பாடச் சொன்னார்கள். அவரும் ஏற்றபடி பாடினார். அப்படிக் கொடுத்தத் தலைப்புகளுள் ஒன்று. கரி எனத் தொடங்கி, உமி என முடியவேண்டும் என்பதே.

இம்மென்னு முன்னே எழுநூறும் எண்ணுறும் பாடக்கூடிய வல்லமை பொருந்திய கவி காளமேகம், உடனே பாடிய பாடல் இது!

கரிக்காய் பொரித்தாள் கன்னிக்காய் தீய்யத்தாள்
பரிக்காயைப் பச்சடியாய்ப் பண்ணாள் – உருக்கமுள்ள
அப்பைக்காய் நெய்துவட்டல் ஆக்கினாள் அத்தைமகள்
உப்புக்காண் சீச்சீ உமி.

என்னங்க! சமையல் தடபுடலாக இருக்கிறது. கரிக்காய் – அத்திக்காய், கன்னிக்காய் – வாழைக்காய், பரிக்காய் – மாங்காய், அப்பைக்காய் – அழகான கத்தரிக் காய்.

எளிமையான பாடல்: பொருள் புரிந்திருக்கும் அனை வருக்கும். நெய்துவட்டல் அத்தனையும் செய்தாள். ஆனால் உப்பு மிகுந்து விட்டது: உண்ண முடியவில்லை. சீச்சீ என உமிழ்கிறார்.

கரி எனத் தொடங்கி, உமி என முடிக்க வேண்டியதால், சுவையுறம் உணவை, உண்ண முடியாமல், அதிக உப்பைச் சேர்த்து உமிழச் செய்துவிட்டார் கவி காள மேகம்.

இன்றைய காலகட்டத்தில் கச்சத்தீவு இருநூற்று எண்பத்தைந்து ஏக்கர் இருபது செண்ட் பரப்பளவு கொண்ட ஒரு மணல் திட்டு. தமிழகத்தின் ராமேஸ்வரத்தில் இருந்து பன்னிரெண்டு கடல் மைல் தூரத்தில் (17 மைல்) அமைந்து உள்ளது. சென்னை பாரிமுனைக்கும் பல்லாவரத்திற்கும் இடைப்பட்ட தூரம் ஆகும்.

கச்சத்தீவிற்கு பல சிறப்புகள் உண்டு. மருத்துவ மணம் கொண்ட கச்சாமை என்ற ஆமை இனம் பெரும் அளவில் காணப்படுவதால், அதற்கு கச்சத்தீவு என நம் மீனவர்கள் பெயர் வைத்துள்ளனர்.

முன்பு ஒரு காலத்தில் இலங்கை தமிழ்நாட்டுடன் இணைந்த பகுதியாக இருந்தது. அதை குமரிக் கண்டம், லெமூரியாக் கண்டம் என்றழைத்ததாக வரலாறு கூறுகிறது. பின்பு ஏற்பட்ட கடல் சீற்றத்தால் இலங்கை என்னும் சிறிய தீவு உண்டானது. மற்ற பெரும் பகுதிகள் கடலில் மூழ்கின.

சிங்களர்கள் இந்தியாவின் ஒரிசாவில் இருந்து குடியேறியவர்கள் என வரலாற்று ஆசிரியர் கூறியதை சுப்ரமணியசாமி தெளிவாக சிங்களர்கள் வரலாற்றை விவரிக்கிறார்.

1480ஆம் ஆண்டிற்கு முன்பு வரை கச்சத்தீவு தமிழர்களின் நிலப்பரப்பு. அந்த நிலப்பரப்பிற்கு நாம் கால்நடையாக நடந்து சென்று வரலாம். 1480 ஆம் ஆண்டு ஏற்பட்ட கடல் சீற்றத்தால் இராமேஸ்வரம் அதைச் சுற்றி 11 தீவுகள் உருவாகின. அவைகள்,

1) இராமேஸ்வரம், 2) குந்துகால், 3) பூணவாசல், 4) முயல் தீவு, 5) பூமரிச்சாள் தீவு, 6) முல்லைத்தீவு 7) மணல் தீவு, 8) கச்சத்தீவு, 9) அப்பாவுத் தீவு, 10) நல்ல தண்ணீர்த் தீவு, 11) உப்புத்தண்ணீர் தீவு, 12) குருசடித் தீவு என உருவாகியது. இன்று இராமேஸ்வரம், கச்சத்தீவு மாத்திரம் இருக்கின்றது. மற்றவை இயற்கைச் சீற்றத்தால் நீரின் உள் மூழ்கி விட்டன.

கி.பி.161 முதல் சுமார் 8 தமிழ் மன்னர்கள் இலங்கையை 220 ஆண்டுகள் ஆட்சி செய்தனர்

# கச்சத் தீவு



என்ற வரலாற்றுச் சுவடுகள் உள்ளன. அதில் 88 ஆண்டுகள் எல்லாள மகாராஜனும் அவருடைய தந்தை ஈழவேந்தன் (சோழனும்) ஆட்சி செய்தனர். இவர்கள் சோழ சாம்ராஜ்ஜியத்தைச் சேர்ந்தவர்கள் என்று இலங்கை வரலாற்றைக் கூறும் மகா வம்சம் பதிவு செய்கின்றது. அதே சமயம் எல்லாள சோழனை வீழ்த்திய துட்டகைமினி வெறும் 24 ஆண்டுகள் தான் ஆண்டான். ஆனால் அவனது கால ஆட்சியை 843 செய்யுள்களிலும், 80 ஆண்டு காலம் ஆட்சி செய்த சோழ மன்னர்களை வெறும் 23 செய்யுள்களிலும் பதிவு செய்துள்ளது சிங்களர்களின் மகாவம்ச வரலாறு.

1205ஆம் ஆண்டு, விஜயபாகு ஆண்டகாலத்தில் குழந்தை செட்டி என்ற அமைச்சர் பற்றி பொது நருவை என்ற கல்வெட்டில் எழுதப்பட்டுள்ளது.

1524ஆம் ஆண்டு வரை முதலாம் விஜயபாகு மன்னருக்கு எதிராகக் கிளர்ச்சி செய்தவர்களில் முக்கியமானவர் செட்டிநாதா. இவ்வாறு தமிழர்கள் ஆட்சி செய்து, வாழ்ந்த வரலாறு இலங்கையில் மிகத் தெளிவாக உள்ளது.

17ஆம் நூற்றாண்டில் 1702ஆம் ஆண்டு இப்பித்தாலத்தையில் சிவன் கோயிலை செட்டியார்கள் கட்டினர். இலங்கையை மையமாகக் கொண்டு பாரசீகத்தில் இருந்து வைரத்தை இறக்குமதி செய்தும், அரேபியாவிற்கு பவளம், முத்து முதலிய பொருட்களை ஏற்றுமதி செய்தும், வாணிகம் செய்தனர். ஒரு காலத்தில் செட்டி நாட்டு நிறுவனங்கள் இலங்கையில் மிகவும் புகழ் பெற்று விளங்கின.

இராமநாதபுரம் மாவட்ட அரசுக் குறிப்பில் 1480ஆம் ஆண்டு தோன்றிய 11 தீவுகள் யாவும் இராமநாதபுரம் சமஸ்தானத்துக்குச் சொந்தமாகவே இருந்துள்ளன. ஆனால் இன்று இராமேஸ்வரம் மற்றும் கச்சத்தீவு மட்டுமே நிலைத்துள்ளன. தளவாய் சேதுபதி காத்த தேவர் என்ற கூத்தன் சேதுபதி ஆட்சி காலத்தில் 1622 முதல் 1635 வரையிலான செப்பேடு ஒன்றில் 69 கடற்கரை கிராமங்களும் தலைமன்னார் வரை அவர்கள் அதிகாரத்திற்கு உட்பட்டது என்று கூறுகிறது.

1803ஆம் ஆண்டு ஜமீன்தார் முறை கொண்டு வரப்பட்டு, கிழக்கிந்திய கம்பெனியார், ராணி மங்கேஸ்வரி நாச்சியாரை ஜமீன்தார் ஆக்கினார்கள். அவர் 1812 வரை நிர்வாகம் செய்தார். அப்போது கச்சத்தீவு இராமநாதபுரம் ஜமீனக்குச் சொந்தம் என்பதை விக்டோரியா மகாராணி தனது பிரகடனத்தில் கூறி இருப்பதை இலங்கை அமைச்சர் அவைச் செயலாளராக இருந்த பி.பி.பெரிஸ் பதிவு செய்து உள்ளார். இவர் நாற்பது ஆண்டு காலம் இலங்கையின் நில அளவைத் துறையில் பணிபுரிந்தவர்.

1905ஆம் ஆண்டு இராமநாதபுரம் மாவட்டம், தொண்டியைச் சேர்ந்த சீனிக்கருப்பன் படையாச்சி என்ற மீனவர், புனித அந்தோணியார் ஆலயத்தைக் கட்டினார். ஆண்டின் மூன்றாம் மாதம், நான்காம் தேதி அந்தோணியார் கோவில் திருவிழா மிகச் சிறப்பாக நடக்கும். இந்நாள் வரையிலும் தமிழக மக்கள் யாருடைய அனுமதியையும் பெற வேண்டியது இல்லை. எனினும் பாதுகாப்பு மற்றும் பயண வசதிக்காக ஆலய பங்குத்தந்தையிடம் பதிவு செய்து கொள்வார்கள். போர்ச்சுக்கீசியரும், டச்சுக்காரரும், பிரித்தானியர்களும் தயாரித்த இலங்கை வரைபடத்திலும் கச்சத்தீவு இல்லை. இவ்வாறு எல்லாத் தரவுகளும் கச்சத்தீவு தமிழ்நாட்டுக்கே உரியது என்றே கூறுகின்றன.

தொடக்க காலங்களில் இலங்கையில் இனக்கலவரம் இல்லாமல் இருந்தது. காரணம் தமிழர்கள் மட்டும்தான் இருந்தார்கள். அதன் பிறகும் கலவரம் இல்லை. ஏனென்றால் சிங்களர்கள் சிறுபான்மையாக இருந்தார்கள். சிங்களர்கள் தமிழர்களை வஞ்சகத்தாலும் சூழ்ச்சியாலும் கொன்றதன் விளைவு தமிழர்கள் சிறுபான்மை ஆகிப்போனார்கள். அவர்களையும் இல்லாது செய்ய சிங்களர்கள் இனக்கலவரங்களை அரங்கேற்றி கொன்று குவித்து வருகிறார்கள் என்பதுதான் வரலாறு.

1973ஆம் ஆண்டு, இந்தியாவின் இரும்புப் பெண்மணியான இந்திராகாந்தி இலங்கையில் சுற்றுப் பயணம் மேற்கொண்டார். அப்போது சிங்கள அரசின் சூழ்ச்சியால் ஒரு போராட்டம் நடைபெற்றது. அது இலங்கையின் ஒரு பகுதியில் வாழ்ந்த ஐந்து இலட்சம் தமிழர்களை இந்திய அரசு ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதாகும். இந்த சூழ்ச்சியை உணர்ந்த அன்னை இந்திராகாந்தி அந்த 5 லட்சம் தமிழர்களுக்காக, அவர்களின் நல வாழ்விற்காக கச்சத்தீவை தானமாகக் கொடுத்தார்.

மேலும், இந்தியா பாகிசுதான், இந்தியா சீனா யுத்தத்தின்போது இலங்கை நாடானது, பாகிசுதானுக்கும் சீனாவுக்கும் ஆதரவு அளித்தது. அந்த நிலைப்பாடு தொடராதிருப்பதற்காகவும், கச்சத்தீவை இலங்கைக்குக் கொடுத்து இராஜதந்திர அடிப்படையில் இலங்கையை தன்வசப்படுத்தினார்

இந்திரா காந்தி. மேலும் நமக்கு அபாயகரமான எதிரியான சீனாவைக் கட்டுப்படுத்துவதற்காக தமிழர்களின் விடுதலை அமைப்பை உருவாக்கி இலங்கையை தன் கட்டுக்குள் வைத்து இருந்த பெருமைமிக்க தலைவர் இந்திராகாந்தி.

1974ஆம் ஆண்டு அதற்கான ஒப்பந்தம் போடப்பட்டது. அதில் மிகத் தெளிவாக ஒப்பந்தத்தின் ஐந்தாவது சரத்தில் இந்திய மீனவர்கள் கச்சத்தீவு வருவதை இலங்கை அரசு எவ்விதத்திலும் தடுக்கக்கூடாது. அனுமதிச் சான்று கேட்கக்கூடாது. தமிழக, இந்திய மீனவர்கள் அங்கு ஓய்வெடுத்துக் கொள்ளலாம். தங்கள் வலைகளை உலர்த்திக் கொள்ளலாம் என்று கூறப்பட்டுள்ளது. இந்த சரத்தை கடந்த முதுகெலும்பு அற்ற காங்கிரசு ஆட்சியில் பாராளுமன்றத்தில் பிரணாப் முகர்ஜி அவர்கள் வாசித்தார்கள். அன்னை இந்திரா காந்தி அவர்கள் கச்சத்தீவை இலங்கைக்கு கொடுத்தாலும், அதை அனுபவிக்கும் உரிமை தமிழனுக்குத்தான் கொடுத்து இருந்தார்.

பெங்கால், குஜராத், கேரளா மீனவர்கள் எவரும் மீன்பிடித்து விட்டு கச்சத்தீவுக்கு வந்து ஓய்வெடுக்க மாட்டார்கள். தமிழக மீனவர்கள்தான் மீன்பிடித்து விட்டு கச்சத்தீவில் ஓய்வெடுப்பார்கள். ஒருவன் வேலை செய்கிற இடத்தில்தான் ஓய்வெடுப்பானே தவிர, ஒரு இடத்தில் வேலை செய்துவிட்டு தொலைதூரத்தில் இருக்கிற மற்றொரு இடம் தேடி பயணம் செய்து ஓய்வெடுக்க மாட்டான். கச்சத்தீவு கடற்கரையில் களைப்பு ஏற்படும் வகையில் கட்டிட வேலையா செய்ய முடியும்? இல்லை. அங்கு மீன்தான் பிடிக்க முடியும். அப்படி மீன் பிடிக்கும்போது கச்சத்தீவில் வலையை உலர்த்திக் கொள்ளலாம். இவ்வாறு இந்திய மீனவர்களுகளான தமிழர்களுக்காக நேர்மையாக உருவாக்கப்பட்டது சட்டம். அன்னை இந்திரா காந்தி பாராளுமன்றத்தில் இது குறித்து பேசும்போது

ஆவணத்தின் அடிப்படையில் அல்ல, அரசியல் காரணங்களுக்காக கொடுக்கப்பட்டது என்று கூறியுள்ளார். ஆனால் அந்நிய நாட்டில் இருந்து குடியேறிய சந்ததியினர், இந்திராகாந்தி அவர்கள் கச்சத்தீவில் நமக்கு ஏற்படுத்திக் கொடுத்த நம் உரிமைகளை, இன்று மறைத்தும், மறுத்தும் வருகின்றனர்.

வந்தேறிகள் கச்சத்தீவு பற்றி, அதன் வரலாற்றைக் கூறும்போது தமிழர்களுக்குள் குழப்பம் ஏற்படும் படி உண்மைகளை மறைத்து பொய்யைக் கூறி, தமிழ் இனத்தை அழிக்க முற்படுகின்றனர். இதையே ஜல்லிக்கட்டிலும் செய்தனர். முதுகெலும்பு இல்லாத காங்கிரஸ், பி. ஜே. பி., ஆட்சியாளர்களால் தமிழர்களின் உரிமையை கச்சத்தீவில் நிலை நிறுத்த முடியவில்லை. இது இவர்களின் பலவீனம் என்பது நமக்கு நன்றாகத் தெரிகிறது. இந்திராகாந்தியைப் போன்றவர்கள் இந்தியாவை ஆள வேண்டும் என்று தமிழர்கள் விரும்புகிறார்கள். அறத்தின்பால் நின்று உருவாக்கப்பட்ட சட்டம், இன்றைய காங்கிரசுக் காரர்களாலும் பிஜேபி காரர்களாலும், ஆரிய வம்சத்தினராலும் நீர்த்துப் போய்விட்டது. தமிழர்களின் உரிமை, நீதி, நியாயம் எல்லாம் குழி தோண்டி புதைக்கப்பட்டுவிட்டது.

1976ஆம் ஆண்டு, மீன் பிடிக்கும் உரிமை குறித்த பேச்சுவார்த்தை கடிதம் மூலம் இரண்டு நாட்டு வெளியுறவுத்துறை செயலாளர்கள் மட்டத்தில் நடைபெற்றது. அந்த உரையாடல் பின் நாட்களில் ஒப்பந்தமாக அங்கீகரிக்கப்பட்டது. ஆனால் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் கூடும் பாராளுமன்றத்தில் வைத்து விவாதிக்கப் படவில்லை. மேலும் ஒப்புதலும் பெறப்படவில்லை.

இவ்வாறு இரண்டு அதிகாரிகளுக்கு இடையில் ஏற்படும் ஒப்பந்தங்கள் ஜனநாயக நாட்டில் சட்டமாக ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது என அனைவரும் அறிவோம். அப்படி என்றால் 1974ஆம் ஆண்டு பாராளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டு ஏற்படுத்தப்பட்ட சட்டமே, சட்டமாக ஏற்றுக் கொள்ளப்படும்.

ஆனால் இன்று கச்சத்தீவின் நிலைப்பாடு வேறுவிதமாக உள்ளது. இதனால் தமிழரின் உரிமை பறிக்கப்பட்டு அந்நியர்களின் தூண்டுதலால் நாம் அடிமைகளாக்கப்படுகின்றோம். இதை உன்னிப்பாக நாம் கவனிக்க வேண்டும்.

முன்பு ஆட்சி செய்த காங்கிரசும் இப்போதைய பிஜேபியும் முதுகெலும்பு இல்லாத அரசாங்கங் களாகத்தான் இருக்கின்றன. சிங்களர்கள், நம் மீனவர்களின் வலையை சேதப்படுத்துவதையும், படகுகளை மூழ்கடிப்பதையும், கைது செய்வதையும், இரக்கம் இல்லாமல் கொலை செய்வதையும், வேடிக்கை பார்க்கின்றனர். ஆனால் 30 ஆண்டுகளுக்கு முன் நம் மீனவனை சுட்டுக்கொன்ற, சிங்கள கடற்படை வீரர்களை கப்பலோடு கைது செய்தார் ராசீவ் காந்தி. அவர் ஆளத்தகுந்தவரா? அல்லது இவர்கள் ஆளத்தகுந்தவர்களா? சிந்திப்பீர் ஒரு கனம். இலங்கையில் 13 அம்சத் திட்டத்தை நிறைவேற்றி, இலங்கையில் தமிழர்களக்கு இருந்த

உரிமையான பகுதிகளைத் தமிழர்களுக்குக் கொடுத்து, தமிழர்கள் சுதந்திரமாக வாழ ஏற்பாடு செய்த ராசீவ் காந்தியை இலங்கைஅரசு கூலிப்படையை ஏவி கொலை செய்து, அப்பழியை தமிழனின் மீது திணித்து விட்டது.

நம் முன்னோர்கள் கச்சத்தீவில் நமக்கு உருவாக்கித் தந்த நம் உரிமைகளை நாம் விட்டுவிட முடியாது. நம் உரிமைகளையும், நம் சுதந்திர சுவாசக் காற்றையும் நாம் அனுபவித்தாக வேண்டும். இது நம் உரிமை. நமது கடமை, இந்தப் போராட்டத்தில் வெல்வதுதான், நாம் நம் சந்ததிகளுக்கு விட்டுச் செல்லும் விடுதலை.

**இராஜாசிங்.**



“தோழர்களே! எனக்கோ வயது82 ஆகிறது. நான் எந்த நேரத்திலும் இறந்துவிடலாம். ஆயினும், நீங்கள் இருப்பீர்கள். உங்களைவிட முதிர்ந்த நான், மரணவாக்கு மூலம்போன்று ஒன்றைக் கூறுகிறேன். மரண வாக்குமூலம் கூறவேண்டிய நிலையில் உள்ளவன் பொய் சொல்ல வேண்டிய அவசியமில்லை.

இன்றைய காமராசர் ஆட்சியில் நமது நாடு அடைந்து வரும் முன்னேற்றம் இரண்டாயிரம், மூவாயிரம் ஆண்டுகளில் என்றுமே நடந்ததில்லை. நமது மூவேந்தர்கள் ஆட்சிக் காலத்திலாகட்டும், அடுத்து நாயக்கர் மன்னர்கள், மராட்டிய மன்னர்கள், முஸ்லிம்கள், வெள்ளைக்காரர்கள் இவர்கள் ஆட்சியில் ஆகட்டும் எல்லாம் நமது கல்விக்கு வகை செய்யவில்லை.

தோழர்களே நீங்கள் என் சொல்லை நம்புங்கள். இந்த நாடு உருப்பட வேண்டுமானால் இன்னும் 10 ஆண்டுகளுக்காவது காமராசரை விட்டுவிடாமல் பிடித்துக் கொள்ளுங்கள். அவரது ஆட்சிமூலம் சுகமடையுங்கள். காமராசரைப் பயன்படுத்திக் கொள்ள நாம் தவறிவிட்டால், தமிழர்களுக்கு வாழ்வளிக்க வேறு ஆளே சிக்காது”.

1961, தேவகோட்டையில் நடந்த பொதுக்கூட்டத்தில் தந்தை பெரியார்.

## இ - சேவை மையங்களில் மேலும் 15 சான்றிதழ்கள் பெறலாம்

தமிழக சட்டசபையில் ஜூலை மாதம் பத்தாம் நாள் நடைபெற்ற வருவாய்த்துறை மானியக் கோரிக்கையின் போது, அத்துறையின் அமைச்சர் ஆர்.பி. உதயகுமார் அறிவிப்பு ஒன்றை வெளியிட்டார்.

அதாவது, “வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் மூலம் ஏற்கனவே, பொதுமக்களுக்கு இணையதளம் மூலம் சாதிச் சான்றிதழ், வருமானச் சான்றிதழ், இருப்பிடச் சான்றிதழ், முதல் பட்டதாரிச் சான்றிதழ், கணவனால் கைவிடப்பட்ட பெண் என்பதற்கான சான்றிதழ் ஆகிய 5 சான்றிதழ்கள் வழங்கப் பட்டு வருகின்றன. மேலும் 15 சான்றிதழ்கள் இணையதள மின் சேவை (இ – சேவை) மூலம் வழங்கப்படும்” என்றார்.

அதன்படி, விவசாய வருமானச் சான்றிதழ், சிறு, குறு விவசாயிச் சான்றிதழ், கலப்புத் திருமணச் சான்றிதழ், விதவைச் சான்றிதழ், குடிபெயர்வுச் சான்றிதழ், இயற்கை இடர்பாடுகளினால் இழந்த பள்ளி, கல்லூரிச் சான்றிதழ்களின் நகல் பெற சான்றிதழ், ஆண் குழந்தை இல்லை என்பதற்கானச் சான்றிதழ், திருமணம் ஆகாதவர் என்பதற்கானச் சான்றிதழ், வாரிசுச் சான்றிதழ், வசிப்பிடச் சான்றிதழ், சொத்து மதிப்புச் சான்றிதழ், அடகு வணிகர் உரிமம், கடன் கொடுப்போர் உரிமம், இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் வகுப்புச் சான்றிதழ் ஆகிய 15 சான்றிதழ்களையும் மின்னாளுமைத் திட்டத்தின் கீழ் இ – சேவை மையம் வழியாக ஏற்கெனவே செயல்படுத்தப்பட்டு வரும் நடைமுறைகளைப் பின்பற்றி இணையதளம் மூலம் பெறலாம்.

இதற்கான அரசாணை தற்போது வெளியிடப் பட்டுள்ளதாக அரசு செய்திக் குறிப்பில் கூறப்பட்டு உள்ளது.



# தமிழக அரசியல்!




பத்தொன்பது சட்டமன்ற உறுப்பினர்கள் ஆளுநரிடம், அரசுக்கு ஆதரவு இல்லை என்று கடிதம் கொடுத்து விட்டனர். ஆதரவை விலக்கிக் கொண்டவர்கள் 21 ஆக உயர்ந்து, இன்னும் உயரும் என்ற நிலையில் எடப்பாடி அரசு அடுத்தடுத்த செயல்பாடுகளில் மும்முரம் காட்டி வருகிறது. எதிர்க்கட்சிகள் ஒன்று சேர்ந்து ஆளுநரிடம். அரசு பெரும்பான்மையை இழந்துவிட்டது. சட்ட மன்றத்தைக் கூட்ட வேண்டும் என்று வேண்டு கோள் வைத்து, அதை ஆளுநர் ஏற்றுக் கொள்ளாமல், இது உட்கட்சி சிக்கல் என்று பதில் சொல்லிவிட்டார்.

பா ஜ க வின் பாசக்கயிறு பலருடைய கழுத்துகளுக்கு குறிவைத்த போதிலும், பன்னீருக்கு பாசம் மிகுந்த கயிறாகத்தான் இருக்கிறது. ஒருவேளை அதிமுக தினகரன் தலைமையின் கீழ் வந்துவிட்டால், பன்னீர்செல்வம், மைத்ரேயன் போன்றோர் பா ஜ கவில் தஞ்சம் அடைந்து விடுவார்கள் என்பதுதான் அரசியல் அறிந்தவர்களின் கணிப்பாக இருக்கிறது.

இதற்கிடையில் தினகரன் அணியினரால் ஆளும் அரசு பெரும்பான்மை இழந்து, ஆட்சி பறிபோய்விடக் கூடாது, திமுக ஆட்சிக்கு வந்துவிடக் கூடாது என்பதற்காக திமுக வின் 21 சட்டமன்ற உறுப்பினர்கள் மேல் (குட்கா தொடர்பாக) நடவடிக்கை எடுக்க ஆளும் அரசு தயாராகி வருகிறது. செயலலிதா மருத்துவமனை போனதிலிருந்து தமிழக அரசியலில் ஒவ்வொரு நாளும் திக் திக் நாளாகவே பலருக்கு நகர்ந்து கொண்டிருக்கிறது.

நடிகர்கள் ரசினிகாந்தும், கமலகாசனும் அரசியலுக்கு வருவதற்கு இதுதான் சரியான தருணம் என்று கருதுவது போல் கருத்துகளை வெளியிட்டு வருகிறார்கள். துக்ளக் குருமூர்த்தி, சுப்ரமணியசாமி போன்றோர் கமுக்க வேலைகள் பல செய்து கொண்டிருப்பதாகவும் செய்திகள் வந்த வண்ணம் இருக்கின்றன. தமிழக அரசியல் என்று அமைதி நிலைக்குத் திரும்பும் என நடுநிலையாளர்களும் பொதுமக்களும் வேதனையோடு காத்துக் கொண்டிருக்கிறார்கள்.

அரசியல் குழப்பநிலை தொடர்ந்தால், நிர்வாகச் சீர்கேடு, முன்னேற்றத்தடை, நிலையாமை, சட்டம் ஒழுங்கு பாதிப்பு என்று பல சிக்கல்கள் தமிழகத்தை ஆட்சி செய்ய தொடங்கிவிடும். அதன் பிறகு ஆட்சிக்கு வரும் கட்சியினருக்கு இவையெல்லாம் பெரும் தலைவலியாவே இருக்கும். இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு, நடுவண் அரசும், ஆளுநரும் சரியான முடிவெடுக்க வேண்டும். குழம்பிய குட்டையில் மீன்பிடிக்கலாம் என்று இருந்தால் மீன்கள் செத்து மிதக்கும் காலத்தை சந்திக்க வேண்டிவரும்.

**வேர்மகள்**




# ஆக்ஸ்போர்டு ஆங்கில அகராதி உருவான கதை

ஆக்ஸ்போர்டு டிக்ஷ்னரி எனப்படும். ஆங்கில அகராதியை உருவாக்க ஜேம்ஸ் முர்ரே என்பவரை நியமித்தது பிலோலாஜிகல் சொசைட்டி ஆப் கிரேட் பிரிட்டன். பத்தாண்டிற்குள் நான்கு தொகுப்புகளை வெளியிட வேண்டும் என்பது முதல்கட்ட திட்டமாகும்.

ஆனால் முர்ரேயும் அவருடைய உதவியாளர்களும் ஐந்தாண்டு காலத்தில் மூன்று பகுதிகளை மட்டுமே முடிந்திருந்தார்கள். 352 பக்கங்கள் கொண்ட அந்தத் தொகுதி யைப் புத்தகமாக வெளியிட்டு விற்பனை செய்தார்கள். நாம் திட்டமிடுவதைச் செயல்படுத்துவது கடின மென்பதை இந்த அகராதி தயாரிப்பு உணர்த்தியது. ஆக்ஸ்போர்டு ஆங்கில அகராதி என்ற பெயரில் தயாரித்து முடிக்க மேலும் பல ஆசிரியர்களைக் கொண்டு வெளியிடப்பட்ட கடைசித் தொகுப்பு வரை முழுமையாக வெளியிட 44 ஆண்டுகள் ஆயின.

மொத்தம் பன்னிரண்டு பகுதிகளாக வெளியிடப்பட்ட இந்த அகராதியின் மொத்த பக்கங்கள் 15 ஆயிரத்து 487. இதில் இடம் பெற்ற மொத்த பக்கங்கள் 15 ஆயிரத்து 487, இதில் இடம் பெற்ற மொத்த வார்த்தைகளின் எண்ணிக்கை 4 லட்சத்து 18 ஆயிரத்து 825, 1972, 1986 ஆண்டுகளிலும் 1993ஆம் ஆண்டிலும் வெளிவந்த அகராதியில் சுமார் 70 தொகுப்பு வெளியாவதற்கு முன்பே இரண்டாவது பதிப்புக்கான ஆயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

இதன் காரணகர்த்தாவான முர்ரே, அகராதி தொகுப்பில் ஈடுபடுவதற்கு முன்பு, மற்றவர்கள் தொல்லை இருக்கக் கூடாது என்பதற்காக தனது வீட்டுத் தோட்டத்தில் ரகசிய அறையை அமைத்துக் கொண்டார். அந்த அறைக்குள் அவரும் அவருடைய மகள்களும் அமர்ந்து வேலை செய்வது இடையூறுலிருந்து தப்பிக்க இவர்கள் அமைத்த அறை கோடையின் போது காற்றோட்டம் இல்லாமல் போனதால், முர்ரேக்கு அடிக்கடி உடல்நலக் குறைவு ஏற்பட்டது.

குளிர்காலங்களில் கதகதப்பாக இருக்க அறைக்கு நடுவே ஸ்டவ் ஒன்றை வைக்க வேண்டியதாயிற்று. முர்ரே, கனமான ஓவர்கோட்டை அணிந்து ஈரம் காலில் படாதபடி மரப்பெட்டியொன்றை போட்டு அதன்மீது பல மணிநேரம் உழைத்து, அகராதி தொகுப்பைத் தயாரித்தார். ஓய்வின்றி தொடர்ச்சியாகப் பணியில் ஈடுபட்டதால், அவர் நினைத்தபடி அகராதியை முழுமையாக முடிக்க முடியாமல் 78வது வயதில் காலமானார்.

முர்ரே பெரிய படிப்பாளியும் அல்ல. ஸ்காட்லாந்தில் ஹாலிக் என்ற சிற்றூரில் தையல் தொழிலாளியின் மகனாகப் பிறந்தார். தானே சொந்தமாக முயன்று கல்வி கற்று தேர்ச்சி பெற்றார். பள்ளியை விட்டு வெளியே வந்தவர் வங்கி ஊழிய ராகப் பணியாற்றினார். பின்னர் ஆசிரிய ராகப் பணியாற்றிக்கொண்டிருந்த போது தான் அகராதியை உருவாக்கும் பொறுப்பு இவருக்குக் கிடைத்தது.

யார் யார் தேர்தலில் நிற்கக் கூடாது என்ற விதிமுறைகளும் அன்று கடைப்பிடிக்கப்பட்டன. இவற்றையும் கல்வெட்டுகள் அறிவித்தன. வாரியம் ஒன்றில் உறுப்பினராக இருந்து கணக்குக் காட்டாதவர் தேர்தலுக்கு நிற்க முடியாது. அவருடைய நெருங்கிய உறவினருக்கும் அந்த உரிமை இல்லை.

ஐம்பெரும் பாதகங்களைச் செய்தவர்களுக்கும் உரிமை மறுக்கப்பட்டது. தீயவர்களின் கூட்டுறவால் கெட்டுப்போனவர்களும் ஆளும் உறுப்பினராக முடியாது. மற்றவர்களின் பொருளைக் கவர்ந்து கொண்டவர்கள் தேர்தலுக்கு நிற்க முடியாது. கையூட்டு வாங்கிய பிறகு அதற்குரிய கழுவாய் செய்தவர்கள், நண்பருக்கத் துரோகம் செய்து, பின்பு கழுவாய் செய்தவர்கள், அதற்குரிய தண்டனையாக கழுதை மேல் ஏற்றப்பட்டவர்கள் கூட லேகை (கள்ளக் கையெழுத்து) போட்டவர்கள் முதலியோர் தேர்தலில் நிற்கும் உரிமை இழந்தவராவார்கள்.

அன்றைய தேர்தல் நடந்த முறை பற்றியும் கல்வெட்டுகள் கூறுகின்றன. அந்தக் காலத்தில் ஒரு சிற்றூர் பல பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு பகுதியும் குடும்பு என்று சொல்லப்பட்டது! (அது இன்றைய வார்டு என்பதைப் போன்றது) ஒவ்வொரு குடும்புக்கும் ஒரு பிரதிநிதி தேர்ந்தெடுக்கப்படுவார் (ஒரு சிற்றூரில் மக்கள் தொகைக்கு ஏற்பக் குடும்புகள் நிர்ணயிக்கப்பட்டன). அன்று உத்தரமேரூரில் முப்பது குடும்புகள் இருந்தன. ஒரு குடும்புவில் உறுப்பினராவதற்குத் தகுதி பெற்றவரின் பெயர்கள் தனித்தனியாக, பனைஓலைத் துண்டுகளில் எழுதுவார்கள். அவற்றை ஒன்று சேர்த்து அந்தக் குடும்புவின் பெயரையும் எழுதி அவற்றுடன் இணைத்து வைப்பார்கள். அவற்றைக் குடம் ஒன்றில் போட்டு வைப்பார்கள்.



இதே முறையில் பல குடும்புகளின் பெயர்கள் எழுதப்பட்ட பனை ஓலைக்குடங்கள் ஊர் நடு மண்டபத் திற்குக் கொண்டு வரப்படும். ஊர் மக்கள் அனைவரும் அங்கு திரண்டு வருவார்கள். அரசரின் ஆணை பெற்ற அலுவலர் ஒருவரும் அங்கு வருவார். (உத்தரமேரூர் தேர்தலுக்குத் தத்தனூர் மூவேந்த வேளாண் என்ற அரசு அதிகாரி வந்தான் என்று கல்வெட்டு சொல்கிறது).

மண்டபத்தில் திரண்டிருப்பவருள் வயது முதிர்ந்த ஒருவர் தேர்ந்தெடுக் கப்படுவார். அந்தப் பெரியவர் ஒரு குடும்புக்குரிய குடத்தை எடுத்து மேலே உயர்த்திக் காட்டுவார். அதை அனைவரும் கவனிப்பார்கள். அவர், அங்கு என்ன நடக்கிறது என்பதை அறியாத சிறுவன் ஒருவனை

# பழந்தமிழகத்தில் தேர்தல் அன்று ஒழுக்கமே தேர்தலின் மகுடம்



மண்டபத்திலும் நடத்தப்பட்டது. பெரிய மரத்தின் அடியிலும் நடத்தப்பட்டது.

ஊராட்சி மன்றத்தாரின் கட்டளைகளை பணிமக்கள், கரணத்தான், பாடிகாப்பான், தண்டுவான் முதலியவர்கள் நிறைவேற்றார்கள். கரணத்தான் என்பவன் கணக்கு எழுதும் கடமையைச் செய்பவன். நேர்மையான வழியில், பொருள் சம்பாதிக்கும் நல்லொழுக்கம் உடையவனே கரணத்தானாக நியமிக்கப்படுவான். இவனுக்கு நெல்லும், ஆண்டு ஒன்றுக்கு ஏழு கழஞ்சு பொன்னும், இரண்டு கூறைகளும் (ஆடைகளும்) ஊதியமாகத் தரப்பட்டன.

அழைப்பார். ஒரு குடும்புக்குரிய ஓலைத் துண்டுகள் அடங்கிய குடத்தில் உள்ளவற்றை மற்றொரு குடத்தில் கொட்டுவார். அதை நன்றாகக் குலுக்குவார். பின்பு அந்தச் சிறுவனைக் குடத்தின் அருகில் வரச்சொல்வார். அவனுடைய கை விரல்களை விரித்துக் காட்டச் சொல்வார். அவன் கையில் எந்த ஒரு ஓலைத் துண்டும் இல்லை என்பதைப் பொது மக்கள் உணரும்படி செய்வதே அவரின் நோக்கமாகும்.

பிறகு, அச்சிறுவன் குடத்துள் கைவிட்டு ஓர் ஓலை நறுக்கை எடுப்பான். அதை அந்தப் பெரியவரிடம் கொடுப்பான். அதில் எழுதியுள்ள பெயரை அவர் படிப்பார். அருகில் உள்ளவரிடம் அதைக் கொடுப்பார். அவரும் உரத்தகுரலில் அப்பெயரைச் சொல்வார். தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினரின் பெயர், ஏட்டில் பதிவு செய்யப்படும். இவ்வாறே, அந்த ஊருக்குரிய எல்லாக் குடும்புகளின் வேட்பாளர்களும் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். ஒவ்வொரு ஊரிலும் பல வேறு வேலைகளைச் செய்வதற்கு வாரியங்கள் என்ற அலுவலகங்கள் உண்டு. கழனி வாரியம், ஏரி வாரியம், தோட்ட வாரியம், கணக்கு வாரியம், குடும்பு வாரியம் முதலியவை இருந்தன. ஊரின் தேவைகளுக்கு ஏற்ப வாரியங்களின் எண்ணிக்கை இருந்தன.

சில ஊர்களில் கலிங்கு வாரியம் முதலியவையும் இருந்தன. வாரிய உறுப்பினர்கள் குற்றம் செய்தால் அவர்கள் தண்டிக்கப்படுவார்கள், விலக்கப்படுவார்கள். குட ஓலைத் தேர்தல் மூலம் மற்றொருவர் தேர்ந்தெடுக்கப்பட்டுக் காலியான இடம் நிரப்பப்படும். ஊராட்சித் தேர்தல் கோயில்

இவன் எழுதி வந்த கணக்கை ஆண்டின் இறுதியில் ஊராட்சிச் சபையிடம் இவன் ஒப்படைப்பான். பாடிகாப்பான் என்ற ஊழியன் இக்காலத்துக் காவலர் (போன்று கடமை செய்தவன். தண்டுவான் என்பவன் இன்றைய வருவாய் ஆய்வாளர் போன்று வரி வசூலித்தவன்.

இன்று, கட்சி ஆட்சி, தேர்தல் மூலம் நடைபெறுகிறது. அன்று கட்சி ஆட்சி என்பது இல்லை. இன்று பெரும்பான்மையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவரே ஆட்சி உரிமை பெறுகிறார்கள். அன்று நன்னடத்தை கொண்ட வர்களே ஆட்சி செய்ய அமர்த்தப்பட்டார்கள். பணபலம், செல்வாக்கு முதலியவை பெற்றவர்களே இன்று தேர்தலில் வெற்றி பெற முடியும். இதற்கு மாறாகத் திருஉளச்சீட்டு என்ற முறையில் இயற்கை வழங்கிய வாய்ப்பு என்ற வகையில் அன்று உறுப்பினர் பதவி பெற்றனர்.

இன்று யார் வேண்டுமானாலும் தேர்தலில் நிற்கலாம். ஆனால், விதிமுறைகளுக்கு உட்பட்டவரே அன்று தேர்ந்தெடுக்கப்பட்டனர். இன்று, ஆளும் கட்சியினர் குற்றம் செய்தாலும் நீதிமன்றம் குறுக்கிடாதவரை பதவியில் இருக்கலாம். அன்று இப்படிப்பட்ட நிலை இல்லை. பொதுவாக இன்று தம்மை முன்னிலைப்படுத்திக் கொள்வதே தேர்தலின் நோக்கமாக உள்ளது. அன்று ஊரின் நலனே குறிக்கோளாக இலங்கியது. பழந்தமிழகத்தின் தேர்தல்முறை அயலகத்து அறிஞர்களாலும் பாராட்டப்பட்டது. இது கவனிப்புக்கு உரியது.



# மீண்டும் சூடுபடுத்திச் சாப்பிடவே கூடாத 8 உணவுகள் பற்றித் தெரிந்துகொள்வோம்!

**சிக்கன்**

கோழி இறைச்சியில் அதிகளவு புரோட்டீன் உள்ளது. பொதுவாகவே புரதச்சத்து நிறைந்த உணவுகள் செரிமானம் ஆக, அதிக நேரம் எடுத்துக்கொள்ளும். சிக்கனைச் சூடுபடுத்தும்போது இதன் புரதச்சத்து மேலும் அதிகரிக்கும்: அதையே இரண்டாவது முறை சூடு செய்து சாப்பிட்டால் அதுவே ஃபுட் பாய்சனாக மாறக் காரணமாக அமைந்துவிடும். எனவே, இதை மீண்டும் சூடுபடுத்திச் சாப்பிடக் கூடாது. ஒரு முறை வறுத்த இறைச்சியை மீண்டும் சூடாகச் சாப்பிட வேண்டும் என்றால் சாண்ட்விச்சாகச் செய்து சாப்பிடலாம்.

**கீரை**

கீரையில் அதிகளவு இரும்புச்சத்து மற்றும் நைட்ரேட் உள்ளன. இதிலிருக்கும் நைட்ரேட்ஸ் சூடுபடுத்தும்போது நைட்ரைட்டாக மாறும். இது புற்றுநோயை உண்டாக்கும் பண்பு கொண்டது. கீரை உணவுகளை மீண்டும் சூடுபடுத்திச் சாப்பிடுவதால், செரிமான பிரச்சனைகள் உண்டாகும். குடல் புற்றுநோய் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் அிதரிக்கும். எனவே, கீரையைச் சூடுபடுத்தி சாப்பிடுவதைத் தவிர்க்கவும்.

**முட்டை**

முட்டை அதிக புரோட்டீன் நிறைந்த உணவு. நன்றாக வேகவைத்த அல்லது வறுத்த முட்டையை மீண்டும் சூடுபடுத்தினால், அது நஞ்சாக மாறும். இது செரிமான பிரச்சனை மற்றும் வயிற்றுக் கோளாறுகளுக்கு வழிவகுக்கும். எனவே, முட்டையை எக்காரணம் கொண்டும் ஒருமுறைக்கு மேல் சூடுபடுத்திச் சாப்பிடக்கூடாது.

**காளான்**

காளானைச் சமைத்து, அப்போதே சாப்பிடுவதே சிறந்தது. காளானிலும் புரோட்டீன் அதிகமாக உள்ளது. இதை, இரண்டாம் முறை சூடுபடுத்தும் போது அது நஞ்சாக மாறி, செரிமானக் கோளாறுகள், வயிற்று உபாதைகளை உண்டாக்கும்.

**சாப்பாடு**

அரிசி நாம் அதிகமாக எடுத்துக்கொள்ளும் ஓர் உணவுப் பொருள். சாதத்தை மீண்டும் சூடுபடுத்திச் சாப்பிட்டால், அதில் நச்சுத்தன்மை அதிகரித்து, ஃபுட் பாய்சனாக மாறிவிடும்.

**உருளைக்கிழங்கு**

உருளைக்கிழங்கை ஒருமுறை சமைத்து ஃப்ரிட்ஜில் வைத்துவிட்டு, தேவைப்படும்போது சாப்பிடும் பழக்கம் பலருக்கு உண்டு. அப்படிச் செய்யும்போது சமைத்த உருளைக்கிழங்கில் உள்ள பாக்டீரியாக்கள் அதிலேயே தங்கி விட வாய்ப்புகள் உள்ளன. இதன் காரணமாக நச்சுத்தன்மை உள்ளதாக மாறிவிடும். வாந்தி, குமட்டல், உடல்நல பாதிப்பு எல்லாம் ஏற்படும்

**சமையல் எண்ணெய்**

எந்த வகை சமையல் எண்ணெயாக இருந்தாலும், அதைத் திரும்பத் திரும்ப சூடுபடுத்திப் பயன்படுத்தக் கூடாது. அந்த எண்ணெயின் அடர்த்தி அதிகரித்து, பயன்படுத்த முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுவிடும். இது புற்றுநோய், இதய நோய்கள் ஏற்படக் காரணமாகவும் அமையும்.

**பீட்ரூட்**

பீட்ரூட்டும் கீரை வகைகளைப் போல நிறைய நைட்ரேட்ஸை உள்ளடக்கியது அதனால் பீட்ரூட்டையும் மீண்டும் சூடுசெய்து பயன்படுத்தக் கூடாது.

"தனிநபர் ரகசியம்'' தீர்ப்பு, மாட்டிறைச்சி விவகாரத்துக்கும் பொருந்தும்

**சுப்ரீம் கோர்ட்டு கருத்து**

தனிநபர் ரகசியம் காப்பது அடிப்படை உரிமை என்ற தீர்ப்பு மாட்டிறைச்சி விவகாரத்துக்கும் பொருந்தும் என சுப்ரீம் கோர்ட்டு கூறி உள்ளது.

மராட்டிய விலங்குகள் பாதுகாப்பு (திருத்தம்) சட்டம் 1995 பிரிவு 5(டி) மற்றும் 9 (பி)ன் படி மாட்டிறைச்சி (மாநிலத்துக்கு உள்ளே அல்லது வெளியே கொல்லப்பட்டது) வைத்திருத்தல் தண்டனைக்குரிய குற்றமாகும். இதை எதிர்த்து மும்பை ஐகோர்ட்டில் வழக்கு தொடரப்பட்டு இருந்தது.

இதை விசாரித்த ஐகோர்ட்டு மேற்கண்ட பிரிவுகளை ரத்து செய்ததுடன். மாநிலத்துக்கு உள்ளே கொல்லப்பட்ட மாட்டிறைச்சி வைத்திருத்தல் மட்டுமே குற்றம் ஆகும் என கடந்த ஆண்டு மே 6ஆம் நாள் தீர்ப்பளித்தது. மாநிலத்துக்கு வெளியே கொல்லப்பட்ட மாட்டின் இறைச்சியை வைத்திருத்தல் குற்றமாகாது என கூறிய நீதிபதிகள், மாநில அரசின் இந்த சட்டம் தனிநபர் ரகசியத்தில் தலையிடும் செயல் எனவும் அறிவித்தது.

ஐகோர்ட்டின் இந்த தீர்ப்பை எதிர்த்து மராட்டிய அரசும், பல்வேறு அமைப்புகளும் சுப்ரீம் கோர்ட்டில் மேல்முறையீடு செய்தன. இந்த வழக்குகள் சுப்ரீம் கோர்ட்டில் நிலுவையில் உள்ளன.

இதற்கிடையே ஆதார் தொடர்பான வழக்கை விசாரித்த சுப்ரீம் கோர்ட்டின் அரசியல் சாசன அமர்வு, தனிநபர் ரகசியம் காப்பது அடிப்படை உரிமை என நேற்று முன்தினம் தீர்ப்பளித்தது. ஒருவர் எதை சாப்பிட வேண்டும்? எப்படி உடுத்த வேண்டும்? என யாரும் கட்டாயப்படுத்த முடியாது என அப்போது கூறிய நீதிபதிகள், இந்த நடவடிக்கைகள் அனைத்தும் அவரவர் தனிப்பட்ட ரகசியம் எனவும் தெரிவித்தனர்.

இந்த நிலையில் மும்பை ஐகோர்ட்டு உத்தரவை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்டு இருந்த வழக்குகளில் ஒன்று சுப்ரீம் கோர்ட்டில் நீதிபதிகள். ஏ.கே. சிக்ரி, அசோக் பூஷண் ஆகியோரை கொண்ட அமர்பு முன்பு நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது மனுதாரர்கள் சார்பில் ஆஜரான மூத்த வக்கீல் இந்திரா ஜெய்சிங், சுப்ரீம் கோர்ட்டு நேற்று முன்தினம் வழங்கிய தனிநபர் ரகசியம் குறித்த தீர்ப்பை குறிப்பிட்டுப் பேசினார்.

ஒருவரின் உணவு தேர்வு என்பது தனிநபர் ரகசியமாக தற்போது பாதுகாக்கப்பட்டு உள்ளது. எனவே இந்த வழக்கின் விசாரணையில் அந்த தீர்ப்பையும் கருத்தில் கொள்ள வேண்டும் என அவர் கேட்டுக்கொண்டார்.

இதற்கு நீதிபதிகள் பதிலளிக்கையில், ஆம், அந்தத் தீர்ப்பு (தனிநபர் ரகசியம்) இந்த மாட்டிறைச்சி தொடர்பான விவகாரங்களுக்கும் பொருந்தும் எனக்கூறினார். பின்னர் இந்த வழக்கை 2 வாரங்களுக்கு நீதிபதிகள் ஒத்திவைத்தனர்.

# எதை சாப்பிட வேண்டும் என யாரையும் கட்டாயப்படுத்த முடியாது





# உணவு விடுதிகளில் என்ன நடக்கிறது?

பொதுவா இட்லி மெத்துனு இருக்கணும்னா, ஒரு டம்ளர் இட்லி அரிசிக்கு கால் டம்ளர் உளுந்து தேவை. இரண்டையும் தனித்தனியா ஊற வெச்சு, தனித்தனியாதான் அரைக்கணும். அஞ்சு மணி நேரம் புளிக்கவெச்சு, சுட்டெடுங்கன்னா பஞ்சு மாதிரி இட்லி தயார். ஆனா, என்ன நடக்குது இங்க? இட்லி அரிசி கால் பங்கு, ரேசன் அரிசி முக்கால் பங்கு, உளுந்து கால் பங்கு, ஜவ்வரிசி முக்கால் பங்கு நைட்டு ஊற வெச்சு பழைய சாதம் கொஞ்சம், சோடா உப்பு எக்கச்சக்கமா.. .எல்லாத்தையும் அரைச்சு, மூணு மணி நேரம் வெயில்ல வெச்சுட்டு எடுத்து சுட்டால், கும்முன்னு குஷ்பு இட்லி தயார். அந்த இட்லியு மீந்துருச்சின்னா, அப்பவும் பிரச்சனை இல்லை. அடுத்த நாள் அரைக்கிற மாவுல மீந்துபோன இட்லியைப் போட்டு அரைச்சிடுவாங்க!

தரமான சோறுன்னா, சோத்துப் பருக்கையை விரலில் வெச்சு மசிச்சா மை மாதிரி மசியணும். அப்பதான் அது வயித்துக்கு ஒண்ணும் செய்யாது. அப்படி இருந்தா கஸ்டமர்ஸ் நிறைய சாப்பிடுவாங்களே. அதுக்காகத்தான் பெரும்பாலான ஹோட்டல்ல முக்காப் பதத்துல சாதத்தை எடுத்துடுவாங்க. சாதம் பளிச்சுனு வெண்மையா இருக்கவும், லேட் ஆனாலும் காய்ஞ்சு போகாமல் இருக்கவும் சாதம் வேகும் போதே சுண்ணாம்புக் கல்லைத் துணியில் கட்டி சாதத்தில் போட்டுடுவாங்க. அன்லிமிட்டட்னு அகலமா போர்டுல எழுதி இருந்தாலும், இந்தச் சோற்றைக் குறிப்பிட்ட அளவுக்குமேல நீங்க சாப்பிடவே முடியாது!

பல ரோட்டுக் கடை ஓட்டல்கள்ல மைதா மாவோட சோடா உப்பு கலந்து, அதுல கழிவு டால்டாவை ஒரு பங்கு மாவுக்குக் கால் பங்கு டால்டா கணக்குல ஓட்டலுக்குன்னே விக்கிற மலிவு விலை டால்டா! கலந்து அடிச்சு அரை மணி நேரத்துல புரோட்டா சுடுவாங்க. புரோட்டா சும்மா பூ கணக்கா பொலபொலன்னு உதிரும். ஆனா, அத்தனையும் உடல் நலத்துக்கு வேட்டு வைக்கும் பரோட்டா.

சிக்கன் கடையில் பொதுவாக நாம கொழுப்பு, ஈரல், குடல், தலை, தோல்,

இதெல்லாம் வாங்க மாட்டோம். அதேபோல மட்டன் கடையில குடலோட சேர்ந்து இருக்கிற ஓட்டுக்கொழுப்பு, ஓட்டுக்குடல் வாங்க மாட்டோம். இதை எல்லாம் தூக்கிப்போடாம ஓரமாக் குவிச்சு வெச்சிருப்பாங்க. பழக்கமான கடைக்காரரா இருந்தா விசாரிச்சுப் பாருங்க. ஓட்டல்காரங்க மொத்தமா வாங்கிட்டுப் போயிடுவாங்கனு அவரும் யதார்த்தமா சொல்லிடு வார். அரைக் கிலோ கறியோட இதை எல்லாத் தையும் ஒட்டு மொத்தமாப்போட்டு தூக்கலா கறிமசாலா, மிளகாய்த் தூள் கொத்தமல்லித்தூள் கொஞ்சம் மரத்தூள் அல்லது குதிரை சாணத்தூள் கலந்து, அஞ்சு ஸ்பூன் அஜினாமோட்டா கலந்து கொதிக்கவெச்சா அரை அண்டா நிறைய திக்கான சால்னா ரெடி!

தலையே போனாலும் சரி, ரோட்டுக் கடைகள்ல தலைக்கறி மட்டும் சாப்பிடாதீங்க. பொதுவாகவே செம்மறி ஆட்டோட தலையில புழுக்கள் இருக்கும். இது இயற்கையான விஷயம்தான். வீடுகளுக்கு வாங்குறப்ப பெரும்பாலும் வெள்ளாட்டுத் தலை தான் வாங்குவோம். செம்மறி ஆட்டுத் தலை வாங்கினாலும் கடைக்காரரு நம்ம கண்ணுல படாம தலையைக் கொதிக்கிற தண்ணில போட் டுட்டு, அப்புறம் அதை எடுத்து தரையில தட்டோ தட்டுன்னு தட்டி புழுவை எல்லாத்தையும் கொட்டிட்டுதான் மேலேயே எடுத்து வைப்பாங்க. அதை வீட்டுக்கு வாங்கிட்டுப்போய் நல்லா சுத்தம் பண்ணி சாப்பிடுவோம். ஆனா, மொத்தமா ஹோட்டலுக்கு விக்கிறப்ப எல்லாம் செம்மறி ஆட்டுத் தலையை இப்படி சுத்தம் பண்ண மாட்டாங்க. அப்படியே கைமாதான்.

எல்லாத்தையும்விட முக்கியம், ஓட்டல்களுக்கு சப்ளை செய்யறதுக்குனே சந்தையில் மளிகைப் பொருட்கள் குறைஞ்ச விலைக்கு கிடைக்குது. எல்லாமே கலப்படம். பாலீஷ் செய்யப்பட்ட இலவச ரேசன் அரிசியோட பொன்னி அரிசி கலந்து விக்கிறாங்க. உடைஞ்ச கழிவுப் பருப்பு, கேசரிப் பருப்பைத் துவரம் பருப்புடன் கலக்கிறாங்க. மிளகாய்த் தூள், கொத்தமல்லித் தூள் டீத் தூளோட மரத்தூள், குதிரை சாணத்தையும் கலக் கிறது எல்லாம் சாதாரணம். நெய், எண்ணெய் வகைகளோட பன்றி, மாட்டுக்கொழுப்பு, வனஸ்பதி மற்றும் நாள்பட்ட கழிவு எண்ணெயையும் கலப்பாங்க.

சாதாரண ஓட்டல்களிலும் கையேந்தி பவன் களிலேயுமே இப்படின்னா டாஸ்மாக் பார் பத்திச் சொல்லவே வேணாம். அதிலும், குறிப்பா, சென்னை பேச்சுலர் பாய்ஸ் ரொம்பக் கவனமா இருக்கணும்! ●



## பெண் பத்திரிகையாளர் கௌரி லங்கேஷ் சுட்டுக்கொலை

பா.ஜ.க.வின் இந்துத்துவா எதேச்சதிகாரத்தை தொடர்ந்து குரல் கொடுத்துவந்த பெங்களூர் பெண் பத்திரிகையாளர் கௌரி லங்கேஷ் மர்ம நபர்களால் 5.9.2017 அன்று சுட்டுக் கொல்லப்பட்டார்.

'லங்கேஷ் பத்ரிகே' என்ற பத்திரிகையின் முதன்மை ஆசிரியர் கௌரி லங்கேஷ். பல்வேறு பிரபல ஆங்கில நாளேடுகளில் பணியாற்றிய இவர் வகுப்பு வாதம், மதவாதத் துக்கு எதிராக செயல்பட்டவர். தொடர்ந்து பாஜகவுக்கு எதிராகவும், இந்துத்துவாவை எதிர்த்தும் பல்வேறு கட்டுரைகளை எழுதி வந்தார். இதனால் இந்துத்துவ அமைப்புகள் கௌரி லங்கேஷ் மீது அவதூறு வழக்குகளை தொடர்ந்தன.

குஜராத் மாநிலத்தில் நடைபெற்ற கலவரங்கள், இஷ்ரத் ஜஹான் உள்ளிட்டபோலி என்கவுன்ட்டர்கள் குறித்து ராணா அய்யூப் எழுதிய புத்தகமான 'குஜராத் ஃபைல்ஸ்' நூலை கன்னடத்தில் மொழி பெயர்த்தார். அச்சமின்றி இடைவிடாது பத்திரிகைப் பணியில் இயங்கிக் கொண்டிருந்த கௌரி லங்கேஷை அவரது வீட்டு வாசலில் நான்கு மர்ம நபர்கள் சுட்டுக் கொன்றனர். இதுகுறித்து போலீஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை செய்து வருகின்றனர்.

கௌரி லங்கேஷ் படுகொலை குறித்து மனித உரிமை செயற்பாட்டாளர் மார்க்ஸ் முகநூலில் வெளியிட்ட பதிவில், "கௌரி லங்கேஷ் மனித உரிமைகள் அமைப்புகளின் தேசிய கூட்டமைப்பின் (NCHRO) முதல் செயற்குழுவில் உறுப்பினராக இருந்தவர். அது தொடர்பான நிகழ்ச்சிகளில் தொடர்ந்து கலந்து கொண்டவர். அவர்மீது ஏராளமான அவதூறு வழக்குகளை இந்துத்துவா அமைப்புகள் தொடர்ந்திருந்தன.

இந்துத்துவாவிற்கு எதிராக யார் குரல் கொடுத்தாலும், இதுபோன்ற உயிர்பறிக்கும் செயலிலும், கொடும் அடக்குமுறையை ஏவியும் பக.ஜ.க.வின் இந்துத்துவா செயலாற்றுவது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது. துணிவு மிக்க பெண் பத்திரிகையாளர் கௌரி லங்கேஷ்



காஷ்மீர் சுற்றுலாத் தலங்கள் நிறைந்த மிக அழகான மாநிலம் என்பது நாம் அனைவரும் அறிந்ததே. ஆனால் காஷ்மீரிகளிடமிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டிய பாடம் நிறைய இருக்கிறது. இதற்காக வேண்டியேனும் தமிழர்கள் காஷ்மீர் சென்றுவர வேண்டும்.

இணையத்தில் காஷ்மீரின் மொழி உருது, ஆங்கிலம் என்று போடப்பட்டுள்ளது. இது உண்மையல்ல.

நாங்கள் பயணம் செய்த மகிழுந்து ஓட்டுநர் கூறியது இது தான். இங்கு 90 விழுக்காடு இஸ்லாமியர்கள் தான் வாழ்கிறோம். எங்கள் மொழி காஷ்மீரி தான், இந்தியோ, உருதோ அல்ல என்றார்.

தமிழ் இஸ்லாமியர்கள் இதை உணர வேண்டும். காஷ்மீரிகளின் அடையாளம் அவர்கள் மதம் அல்ல. அவர்கள் மொழிதான் அவர்களுக்கு அடையாளத்தைக் கொடுக்கிறது. தமிழ் இஸ்லாமியர்கள் தங்கள் அடையாளத்தை இழக்காமல் இருக்க உருது இஸ்லாமியருடன் கலக்காமல் இருக்க வேண்டும். இஸ்லாம் மதத்தை மட்டும் தூக்கிப்பிடித்துக் கொண்டு, உருது இஸ்லாமியருடன் கலந்துவிட்டால் உலகின் மூத்த குடியாம் தமிழன் என்கிற பெருமைமிகு அடையாளத்தையே இழந்துவிடுவர்!

# காசுமீர் கற்றுக்கொடுத்த பாடம்

மருத்துவர் க.பொருநை

காஷ்மீரில் இயற்கை அழகு கொட்டிக் கிடக்கிறது. ஸ்ரீநகர் டால் ஏரி, மொகலாயத் தோட்டங்கள், எங்கு சென்றாலும் பனி மலைகள் என்று அம்மாநிலம் முழுவதுமே எழில்மிகு சுற்றுலாத் தலங்கள் பல இருக்கின்றன. சுற்றுலாப் பயணிகள் மூலமும், அங்கே தயாராகும் கைவினைப் பொருட்கள் விற்பனை மூலமும், காஷ்மீரிகளுக்கு நல்ல வருமானம் கிடைக்கிறது.

பகல்கம், குல்மர்க், சோனா மார்க் உள்ளிட்ட இடங்களுக்கு நாங்கள் மகிழுந்தில் சென்றோம். அந்த ஊர் பேருந்து நிலையம் வரை தான் நாங்கள் வந்த மகிழுந்தைப் பயன்படுத்த வேண்டும். உள்ளூரைச் சுற்றிப் பார்க்க வேறு மகிழுந்தை வாடகைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கூறிவிட்டார் எங்கள் ஓட்டுநர். இதற்குப் பெயர் தான் மண்ணுரிமை!

நாங்கள் பார்த்தவரை உணவகங்கள் முதல் அனைத்துக் கடைகள், வணிக நிறுவனங்களை வைத்திருப்போர் காஷ்மீரிகள் மட்டுமே! ஓரிரு இடங்களில் சீக்கியர்கள் அவர்களிடம் பணி செய்கிறார்கள். மேலும் காஷ்மீருக்கென்று சிறப்பு விதி 370 இருப்பதால் அம்மாநிலத்தில் பிற இந்தியர்கள் சொத்து வாங்கவும் முடியாது.

தமிழகத்திலோ வேற்றினத்தார் குடியேற்றங்கள் கட்டுக்கடங்காமல் போய்க் கொண்டிருக்கிறது. தமிழகத்திலுள்ள பல கல்வி மற்றும் வணிக நிறுவனங்கள் வேற்றினத்தார் கைகளில் இருப்பதால், தமிழர்கள் அந்நிறுவனங்களில் அடிமட்ட வேலை தான் செய்கின்றனர். வந்தாரை (துரோகிகளை) வாழ வைத்தும் அவர்களையே ஆளவைத்தும் இந்தத் தாழ்நிலையை அடைந்துவிட்டனர் அப்பாவித் தமிழர்கள்.

மேலும் ஆங்கிலேயரைக் காட்டிலும் இப்போது ஒரு படி மேலாகவே நம்மை அடிமைப்படுத் திவைத்திருக்கிறான் வடநாட்டான். நடுவணரசு என்ற பெயரில் தமிழகத்திலுள்ள கனிம வளங்கள், கடல் வளங்கள் என அனைத்தையும் கொள்ளை யடித்துச் செல்கிறான்.

பொதுத்துறை நிறுவனங்களைத் தனியார் மயமாயக்குகிறேன் என்று கூறி தமிழ் மண்ணில் புதைந்துகிடக்கும் கருப்புத் தங்கமான நெய்வேலி நிலக்கரிச் சுரங்கத்தையே தனியாருக்கு விற்கத் துவங்கிவிட்டான் வடநாட்டான். கடவுளே! தங்களுக்குச் சொந்தமான அந்தச் சுரங்கத்தின் பங்குகளை வடநாட்டானிடம் காசு கொடுத்து வாங்கியது தமிழக அரசு.

இப்போது தமிழக அரசு மருத்துவக் கல்லூரியில் உள்ள பட்ட மேற்படிப்பு இடங்களில் நீட் தேர்வு மூலம் 50 விழுக்காடு வட மாநில மாணவர்களின் நலன் கருதிப் பிடுங்கிக் கொண்டுள்ளான் வட நாட்டான். மருத்துவக் கல்லூரியில் எம்.பி.பி.எஸ் இல் 15 விழுக்காடு இடங்களைப் பிடுங்கிக் கொண்டுள்ளான். மேலும் மருத்துவக் கல்லூரியில் சேர்வதற்கு நீட் தேர்வைக் கொண்டு வந்து அரசுப் பள்ளியில் பயிலும் மாணவர்கள் எம்.பி.பி.எஸ் சேரவே முடியாது என்ற நிலைக்குத் தள்ளப் பட்டுள்ளார்கள்.

ஆனால் காஷ்மீர் மாநில அரசு மருத்துவக் கல்லூரியில் இளநிலை எம்.பி.பி.எஸ். ஆகட்டும் அல்லது முதுநிலை ஆகட்டும் பிறமாநில மாணவர்கள் ஒருவர் கூட அங்கு சேர்க்கப்பட மாட்டார்கள்!

காலம் காலமாக வடநாட்டுடன் இணைந் திருக்க தங்களுக்கென்று தனி வரலாறும் இல்லாத காஷ்மீரிகளே தங்கள் மண்ணுரிமையைக் காத்து வடநாட்டானிடம் அடிமைப்படாமல் வாழ்கின்றனர்.

ஆனால் வரலாற்றில் 2000 ஆண்டுகளுக்கும் மேலாக வடநாட்டானுடன் இணைந்திராமல் தங்களுக்கென்று தனிப்பெரும் வரலாற்றைக் கொண்டுள்ள தமிழகம் ஆங்கிலேயர் வளர்ச்சிக்குப் பின் தான் முதன் முதலில் வடநாட்டானிடம் அடிமைப்பட்டது.

காவிரி, முல்லைப்பெரியாறு, பாலாறு ஆகிய சிக்கல்களில் நம் அண்டை மாநிலத்தவர் நம்மை வஞ்சித்தாலும், தமிழகம் பாலைவனமாக மாறினாலும் அதை வேடிக்கை தான் பார்க்கிறான் வடநாட்டான் (நடுவணரசு உச்சநீதிமன்றம்)

ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக நடந்து வரும் நம் பண்பாட்டு அடையாளமான ஏறுதழுவு தலையே தடை செய்து விட்டான் வடநாட்டான்! மேலும் தமிழர்களுக்குப் பயன்படாத, நம் சுற்றுச்சூழலுக்கும் நம் விவசாயிகளுக்கும் கேடு விளைவிக்கும் கெயில், மீத்தேன் எடுத்தல், நியூட்ரினோ, அணுஉலை ஆகியவற்றை தமிழகத் தில் தான் நிறுவுகிறான் வடநாட்டான்!

இத்திட்டங்கள் அனைத்துமே பிற மாநிலத்த வரால் வேண்டாம் என்று விரட்டியடிக்கப்பட்ட திட்டங்கள்! திராவிடரை ஆட்சிப்பொறுப்பில் அமர்த்தியது தமிழரின் தவறு. வேற்றினத்தார் (திராவிடன்) எப்படித் தமிழ் மண்ணைக் காப்பான்?

ஒருநாள் எங்கள் மகிழுந்து ஓட்டுநரிடம் காஷ்மீரிகளுக்கு யாருடன் இணைந்திருக்க விருப்பம்? இந்தியாவுடனா? பாக்கிசுதானுடனா? என்று வினவினேன். அதற்கு அவர், "எங்களுக்கு இந்தியாவுடனோ, பாக்கிசுதானுடனோ இணைந் திருக்கத் துளியும் விருப்பமில்லை. தன்னுரிமை யுள்ள காஷ்மீர் தேசம் அமைப்பது தான் எங்கள் விருப்பம், குறிக்கோள் எல்லாமே" என்றார்.

இந்தியாவுடன் இணைந்திருந்தாலும் ஓரளவுக் குத் தங்கள் மண்ணுரிமையைக் காத்து வரும் காஷ்மீரிகளே இவ்வளவு தெளிவுடன் இருக்கி றார்களே என்று நாங்கள் வியப்படைந்தோம்!

நம் மண்ணுரிமையையும் பறித்துக் கொண்டு நம்மையும் இரண்டாம் தரக் குடிமக்களாக நடத்தி வரும் வடநாட்டானிடம் அடிமைப்பட்டுக் கிடக்கும் தமிழர்களுக்கு மண்ணுரிமை குறித்த விழிப்புணர்வு எப்போது வரும்?

மேலும் நம் அரசியலமைப்புச் சட்டத்தில் இந்தியாவை எங்குமே மத்திய அரசு என்று குறிப்பிடவில்லை! பல மொழிவழித் தேசியங்கள் ஒன்றிணைந்த ஒன்றிய அரசு என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஒன்றியம் என்பதன் பொருள் விருப்பத்தின் அடிப்படையில் ஒன்று சேர்வது தான். எனவே நமக்கு விருப்பம் இல்லை என்றால் இந்திய ஒன்றியத்திலிருந்து எப்போது வேண்டுமானாலும் நாம் விலகிக் கொள்ளலாம். இதற்குத் தமிழர்கள் முதலில் மண்ணுரிமை குறித்த தெளிவுடனும், ஒற்றுமையுடனும் இருக்க வேண்டும். இராமதாசு, தொல்.திருமா இவர்களைக் காட்டிலும் சீமான், பழ.நெடுமாறன், அரிமாவளவன் ஆகியோருக்கு மண்ணுரிமை குறித்த தெளிவு நன்றாக இருக்கிறது.

தமிழ் மண்ணை ஆண்டுவரும் ஆரிய திராவிடக் கூட்டணி அரசுகளின் பிரித்தாளும் சூழ்ச்சியையும் மீறி தமிழர்கள் ஒன்றுபட வேண்டும். முயற்சி திருவினையாக்கும். ஒன்று படுவோம். நம் தாய் மண் உரிமையை மீட்டெடுப் போம்.

●



## நடுவண் அரசின் நரித்தனம்

கல்வியை மாநிலத்தின் அதிகாரத்தில் இருந்து பறித்துக் கொண்டிருக்கிறது நடுவண் அரசு. புதிய கல்விக் கொள்கை என்ற ஒரு திட்டத்தைக் கொண்டு வந்து, பல சிக்கல்களுக்கு வித்திட்டது நடுவண் அரசு. மாநில கல்விச்சூழல்களை குலைக்கும் விதமாக, நீட் தேர்வு என்ற ஒன்றைக் கொண்டு வந்து, சிற்றூர் மாணவர்களின் மருத்துவராகும் கனவை குட்டிச்சுவராக்கியது நடுவண் அரசு.

இப்போது, ஒரு மாணவனுக்கு ஆண்டுக்கு எண்பதாயிரம் செலவு ஆகிறது என்று சொல்லி, பல பள்ளிகளை தனியாருக்குத் தாரை வார்ப்பதற்கு முனைந்திருக்கிறது நடுவண் அரசு. இது மக்கள் நலம் பேணும் அரசா? அல்லது தனியாருக்கு தாளம் போடும் அரசா என்று தெரியவில்லை. மக்களின் அடிப்படைத் தேவைகள் பலவற்றில் கைவைத்த அரசு, கல்வியில் கை வைப்பது என்பது நல்ல பாம்புப் புற்றுக்குள் கைவிட்ட கதையாக மாறும் என்பதை உணர வேண்டும்.

**நல்லாண்டான்.**



# ஊர் எல்லாம் நம்ம ஊரே!

ஊர் என்ற பெயரே தமிழால் ஆனது. அதை விரும்பாத சிலர் அதையும் மாற்றி பெயரிட்டாலும் அது மாறாது தமிழாகவே மணக்கிறது.

அண்மையில் பெங்களூர், மைசூர், மங்களூர் போன்ற ஊர்களின் இறுதியில் இருக்கும் ஊர் என்பதை கன்னடத்தில் ஊரு என மாற்றினார்கள். அதனால் அது கன்னடமாக மாறிவிடும் என நம்பினார்கள். அப்பவும் அது தமிழின் மூலம் என்பதையே சொல்லிக் கொண்டிருக்கிறது என்பதுவே உண்மை.

அதேபோன்று காளிகட்டம் என்பது கல்கத்தாவாகி, இப்பொழுது கொல்கத்தாவாக மாறி உள்ளது. காளி என்ற தமிழ் தெய்வத்தின் பெயரால் அமைந்த ஊர் என்பதும் அங்கே பெரும் திருவிழாவாக கொண்டாடப்படும் விழா காளி பூசையாகவும் கொண்டாடப்பட்டு வந்ததையும் அவர்கள், துர்கா பூசை என வடமொழியில் மாற்றிக் கொண்டார்கள்.

அதைப் போலவே, மூன்று பக்கம் கடலாய் பாய அமைந்த நகராக இருக்கும் மும்பாய், அங்கே அமைந்திருக்கும் மும்பாய் அம்மன் பெயரால், மருவிய பம்பாயை நீக்கி விட்டு மும்பாய் என தமிழாக ஆக்கியுள்ளனர்.

இப்படி தமிழ் ஊர்களாகவும் பெயர்களாகவும் இருந்த பலவும் திருமலை  திருமலாவாகவும் சபரிமலை சபரிமலா எனவும் நல்லமலை நல்லமலா எனவும் அண்மைக் காலமாக மாறியுள்ளன. வடமொழி சாயலாக மாற்றப்பட்டன வலுக்கட்டாயமாக.

இப்படி தமிழில் இருந்து மாறியவை ஏராளம் வடக்கிலும் தெற்கிலும். எத்தனை பட்டிகள், பட்டணங்கள். பீகாரின் தலைநகர் பாட்னா, தெற்கில் சென்னைபட்டணம், ம(ா)சூலிபட்டணம் சீரங்கபட்டிணம். இப்படியே ஜெய்ப்பு ஊர் ஜெய்ப்பூர், சிறிநகர், என...

ரசியாவின் ஏவுகனை தளம் பட்டி என்ற பெயரில் அமைந்த ஊர்தான். உதம்பூர், உதய்ப்பூர் என அகழ்வாராய்ச்சி போல, ஊர்.

பெயர் ஆராய்ச்சிகளும் தமிழருக்கு பெருமை சேர்ப்பனவே!

பட்டி என்பதுவே நிலைத்த பின் பள்ளியாகி அதுவே கன்னடருக்கு ஹள்ளியானது.

நாம் வாழும் இடங்களுக்கு ஊர், சேரி, பள்ளி, பாக்கம், நகர், பட்டணம் என பலவகையாக பெயரிடப்பட்டு இருக்கிறது தமிழ்!

அவை:

ஊர்ந்து சென்றடைந்ததால்  ஊர். சென்று சேர்ந்ததால் சேர் ஈ சேரி.

கும்பல், கும்பலாய் இருந்ததால்  குப்பம்.

பலரும் அடைபட்டு கிடந்ததால்  பட்டி.

அங்கேயே தங்கி, நிலை பெற்ற பின்னே அதுவே பள்ளி.

பக்கம் பக்கம் இருந்ததால்  பாக்கம்.

பல்கி பெருகி நகரந்ததால்  நகரம்.

பட்டிகள் பல சேர பட்டிகளின் இனம் பட்டினம், பட்டணம்.

ஆட்சிகள் புரிந்த இடமானதால் புரி.

அதை அண்டி இருந்து அமைந்தவை புறம். என, இயற்கையாக அமைந்தன நம் ஊர் பெயர்கள்.

இவை அன்னைத் தமிழ் மொழிந்தவை. தமிழர் சொன்னவை.

காடுகளும், மரங்களும் மலை குகைகளும் நாம் வாழும் இடங்களாக இருந்து, மாறி வளர வளர, நாம் ஊர்ந்து மரம் செடிகளிடையே பயணித்து சென்றடைந்தவையும் சேர்ந்தவையும் பழைய வரலாறுகளை சொல்லிக் கொண்டிருக்கிறது நாம் வாழும் ஊர் பெயர்கள்.

இன்றைக்கு தமிழர்கள் சில பெயர் மாற்றப்பட்டாலும் அவை மாறாமல் ஒலித்துக் கொண்டிருக்கின்றன. நாடு முழுவதிலும் அதைத் தாண்டியும்.

பல மொழிகளிலும் பல நிலங்களிலும்.

தமிழே முன்னை மொழி! அதற்கு முந்திய மொழியென, திராவிட மொழியென எந்த மொழியும் இருந்ததில்லை. தமிழே பிற மொழிகளின் தாய்!

மனோன்மணியம் சுந்தரனார் அவர்கள் தன் தமிழ்மொழி வாழ்த்துப் பாடலில், உன் உதிரத்திலிருந்து கன்னடம், தெலுங்கு, துளு, மலையாளம் என மொழிகள் தோன்றின என பாடினார். சமக்கிருதமும் தமிழ் என்னும் கடல் மேல் கீளும் சிந்திய எண்ணெய் படலம் போல.

தமிழின் வளத்தைப் பெற்றே வளர்ந்தது அது! இதையே உலக மொழி ஆய்வு, அறிஞர்கள் உரைப்பது.

விழா! வேடிக்கைகள் தமிழ்நாட்டின்,,, கண் மூடித்தனம்.

தமிழ்நாட்டில் திராவிடக் கட்சிகள் என்றைக்கு ஆட்சி அமைத்ததோ அன்றே, இந்த நூற்றாண்டு விழாக்கள், முப்பெரும் நாற்பெரும் விழாக்கள், பிறந்த நாள் விழாக்கள், வழியனுப்பு, விழாக்கள், வரவேற்பு விழாக்கள், பதவி ஏற்பு, துறப்பு விழாக்கள், வெற்றி விழாக்கள்.

கட்சி அலுவலகத்திற்கே தலைவர்கள் வந்ததற்கு விழாக்கள் என கொண்டாடி கொண்டாடி தமிழ் மக்களுக்கு வேறு வேலையே இல்லாமல் போனது தான் பிறவிப்பயன் என்றாகியது.

இந்த விழாக்களாலும் பெயர் வைப்புகளாலும் சிலை எடுப்புகளாலும் தமிழ் நாட்டின் வரி வருமானமும் காலியானது. மக்களின் தேவையும் தலைவர்கள் செய்த ஊழலும் மறந்தே போனது.

இந்த நோக்கத்திற்காகவே திராவிட கட்சிகள் எதற்கும் விழா நடத்த எழுந்து விடும்.

ஊர், பணம், ஏதுமறியா தொண்டர்களின் உழைப்பு.

தனக்கு கண்களை மூடிக் கொண்டு ஆதரிப்பவர்களை உருவாக்கிக் கொள்ள ஒரு தேர்வு போல அமைந்தது.

இப்பொழுது, திருக்கோயில்களில் இருக்கும் கோபுரம் தாங்கி பொம்மைகளை போல, சிலர் உருவாகிப் போனார்கள். இவர்கள் மட்டும் இல்லாது போயிருந்தால். .தமிழ்நாடு, உலக வரைபடத்திலேயே இருந்திருக் காது என்ற பயமுறுத்தல்கள் வேறு.

தமிழரெல்லாம் படித்தே இருந்திருக்க மாட்டார்கள். தமிழே இவர்களால் தான் உலகத்திற்கு அறிமுகம் செய்து வைக்கப்பட்டது.

நாட்டில் பெண்ணுரிமையே இருந்திருக்காது. ஆண்கள் எல்லோரும் அடாவடிக்காரர்கள், என பலவாறு பேச வைத்துள்ளார்கள். இவர்கள் மட்டும் கணக்கில்லாமல் மனைவிகளை வைத்துக் கொண்டு!

இந்த மூளை மழுங்கடிப்பைத் தானே முன்னேற்றங்கள் என முழங்கி, தமிழ் நாட்டிற்கு எதுவும் செய்யாமலேயே தொடர்ந்து அரசியல், ஆட்சி, தனக்கும் பின்னாலும் அது, தன் உறவுகளை விட்டு போய் விடாமல் இருக்க, தகுந்த ஏற்பாடுகள் என மக்களாட்சி முறைகள் கேலியாகி நிற்கின்றன.

தமிழ்நாட்டில் ஆட்சிக்கு வருகின்றவர்கள் கொடுத்து வைத்தவர்கள்.

அப்படி வந்தவர்களையும் வராதவர்களையும் வா! வா! மன்னா என வீட்டிற்குள்ளே இருப்பவரையும் அழைத்து வர, கூட்டம் நடத்த இருக்கின்றவர்களும் இங்கே இருக்கிறார்கள்?

எல்லோருக்கும் கடற்கரையில் இடம் கொடுத்து அவர்களின் குடியிருப்புகளை மக்களின் வரி பணத்தை கொடுத்து விலைக்கு வாங்கி நினைவுச் சின்னம் அமைக்கும்.

இன்மேல், தமிழ் மக்கள், வேறு எதையும் எதிர் பார்க்க மாட்டார்கள். இது மட்டும் உறுதி!

பஞ்சமும் நோயும் நின் மெய்யடியார்க்கோ.. பாரினில் மேன்மைகள் வேறினி யார்க்கோ..பாரதி அன்று பாடியது. இன்றும் அதுதானோ?

ஊழலும் முறைகேடுகளும் செய்பவர்க்கே இங்கு பதவி சுகங்கள் பரிமாறல்கள்?

விளக்கம் தெளிவை ஏற்படுத்த வேணும் தமிழர் நமக்கு!

பாவலர்
**மு. இராமச்சந்திரன்**
தலைவர் தமிழ்த் தன்னுரிமை இயக்கம்.

கவிபாஸ்கர்

நீட் தேர்வை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்த அரியலூர் மாணவி அனிதா 1.9.2017 அன்று தற்கொலை செய்துகொண்டார். அரியலூர் குழுமூரைச் சேர்ந்த அனிதா மிகவும் ஏழ்மையான குடும்பத்தைச் சேர்ந்தவர். பிளஸ் 2 தேர்வில் இவர் 1200க்கு 1176 மதிப்பெண் பெற்றிருந்தார். மருத்துவப் படிப்பில் சேர 196.75 கட் ஆஃப் மதிப்பெண் வைத்திருந்தார். ஆனால், நீட் அடிப்படையிலேயே மருத்துவ சேர்க்கை நடைபெறும் என அறிவிக்கப்பட்டதால் மருத்துவ படிப்புக்கான வாய்ப்பை இழந்தார். நீட் தேர்வில் 700க்கு 86 மதிப்பெண் மட்டுமே அவர் எடுத்திருந்தார்.

சிறு வயதிலிருந்தே மருத்துவராக வேண்டும் என்ற கனவில் இருந்த அனிதா தனது கனவு தகர்ந்ததால் மன அழுத்தத்திற்கு தள்ளப்பட்டு தற்கொலை செய்து கொண்டார்.



அதிகார வர்க்கமும், சட்டமும் இணைந்து அனிதாவை கொலை செய்துவிட்டது. இந்த கொலைக்கு மத்திய மாநில அரசுகளே காரணம்.

எம்.பி.பி.எஸ்., மற்றும் பல் மருத்துவத்துக்கான பி.டி.எஸ். உள்ளிட்ட மருத்துவப் படிப்புகளுக்கு நாடு முழுவதும் ஒரே மாதிரியான தேர்வுக்காக மத்திய கல்வி வாரியம் மூலம் "நீட் தேர்வு" நடத்தப்பட்டது.

"நீட்" தேர்வில் இருந்து தமிழக மாணவர்களுக்கு விலக்கு பெற முயற்சிகள் செய்யப்பட்டது. ஆனால் அதை மத்திய அரசு ஏற்க வில்லை.

இதையடுத்து திட்டமிட்டபடி "நீட்" தேர்வு நடந்தது. அதை எதிர்த்து தமிழக மாணவர்கள், குறிப்பாக மரணமடைந்த அனிதா சுப்ரீம் கோர்ட்டில் வழக்கு தொடர்ந்தார். அதை சுப்ரீம் கோர்ட்டு தள்ளுபடி செய்தது.

மருத்துவப் படிப்புக்கான நீட் தேர்வில் இருந்து தமிழ்நாட்டு மாணவர்களுக்கு விலக்கு அளிப்பதற்கான மசோதா தமிழக சட்டசபையில் நிறைவேற்றப்பட்டது. அந்த மசோதா ஜனாதிபதி ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இன்னமும் அது நிலுவையில் உள்ளது.

ஜனாதிபதி ஒப்புதல் வழங்க தாமதம் ஏற்பட்டதால் மாற்று ஏற்பாடு செய்ய தமிழக அரசு முடிவு செய்தது. இதைத் தொடர்ந்து மாநில கல்வி திட்டத்தில் படித்த மாணவர்களுக்கு நீட் தேர்வில் 85 சதவீதம் உள் இடஒதுக்கீடு வழங்கப்படும் என்று தமிழக அரசு அரசாணை பிறப்பித்தது. இதன் மூலம் கிராமப்புற மாணவர்கள் அதிக அளவில் மருத்துவப் படிப்பில் சேர வழிவகை உருவாக்கப்பட்டது.

# மாணவி அனிதா தற்கொலையும் சமூகநீதி கொலையும்

ஆனால் இதற்கு மத்திய கல்வி வாரிய பாடத் திட்டமான சி.பி.எஸ்.சி.யில் படித்தவர்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். 85 சதவீத உள்ஒதுக்கீட்டை ரத்து செய்யக்கோரி சி.பி.எஸ்.சி. மாணவர்கள் தரப் பில் சென்னை ஐகோர்ட்டில் வழக்கு தொடரப் பட்டது.

அதை விசாரித்த சென்னை ஐகோர்ட்டு நீதிபதிகள், "தமிழக அரசின் 85 சதவீத உள் இட ஒதுக்கீடு முறை செல்லாது" என்று அறிவித்தனர். அதை ரத்து செய்தும் உத்தரவிட்டனர்.

இந்த உத்தரவை எதிர்த்து சுப்ரீம் கோர்ட்டில் தமிழக அரசு சார்பில் மேல்முறையீடு செய்யப் பட்டது. இதையடுத்து சுப்ரீம் கோர்ட்டு இரு தரப்பினரையும் அழைத்து விசாரித்தது.

இதற்கிடையே மருத்துவ கவுன்சிலிங் நடத்த வேண்டியதிருப்பதால் இந்த அப்பீல் வழக்கை அவசர வழக்காக கருதி விசாரிக்க வேண்டும் என்று தமிழக அரசு சார்பில் கோரிக்கை விடப்பட்டது. அந்த கோரிக்கையை சுப்ரீம் கோர்ட்டு ஏற்றுக் கொண்டு விசாரணை நடத்தியது.

நீதிபதிகள் தங்கள் தீர்ப்பில், "நாடு முழுவதும் மாணவர்களிடம் சமநிலை முறை வேண்டும் என்பதற்காகத்தான் "நீட்" தேர்வு முறை நடத்தப் பட்டுள்ளது. இந்த நிலையில் மாநில பாடத் திட்டத்தில் படித்தவர்களுக்கும், சி.பி.எஸ்.சி. பாடத் திட்டத்தில் படித்தவர்களுக்கும் இடையே பார பட்சம் காட்டப்படுவதை ஏற்க முடியாது" என்றனர்

மேலும், "மாணவர்கள் நலன் கருதி 85 சதவீத ஒதுக்கீடு அறிவிப்பை சென்னை ஐகோர்ட்டு ரத்து செய்ததை வரவேற்கிறோம். அந்த ரத்து செல்லும். எனவே தமிழக அரசின் மனுவை தள்ளுபடி செய்கிறோம்" என்றும் அறிவித்தனர்.

இப்பிரச்சினையில் மத்தியஅரசும், மாநில அரசும் இணைந்து மாணவர்களுக்கு அநீதி இழைத்துவிட்டது. நீட் தேர்வில் இருந்து தமிழக அரசுக்கு விலக்கு அளிக்க முடியாது என்று உச்சநீதி மன்றம் கூறிவிட்டது. ஏனெனில் தமிழக அரசின் அவசர சட்டத்திற்கு ஒப்புதல் தர முடியாது என்று மத்திய அரசு வழக்கறிஞர் நீதிமன்றத்தில் தெரிவித்து விட்டதையடுத்து இந்த உத்தரவு பிறப்பிக்கப் பட்டுள்ளது.

நீட் விலக்கு கோரி தமிழக சட்டசபையில் இரண்டு மசோதாக்கள் தாக்கல் செய்யப்பட்டன, ஆனால் அதை குடியரசுத்தலைவர் ஒப்புதலுக்கு அனுப்பவில்லை. நீட் தேர்வில் விலக்கு கோரி மாணவர்கள் போராடி வந்தனர். இதனிடையே மத்திய அமைச்சர் நிர்மலா சீதாராமன் ஓராண்டு விலக்கு அளிப்பதாகக் கூறினார்.

ஆனால் அவசரச் சட்டத்திற்கு ஒப்புதல் தர முடியாது என்று கூறியுள்ளது. பா.ஜ.க.,வின் இரட்டை நிலையையே இது காண்பிக்கிறது, ஒரு பக்கம் அவசரசட்டம் கொண்டு வரச்சொன் னார்கள், மற்றொருபுறம் நீதிமன்றத்தில் ஒப்புதல் தர முடியாது என்று கூறுகின்றனர்.

நீதிமன்றம் சொன்னாலும், கொள்கை முடிவுகள் எடுப்பது நாடாளுமன்றம் தான் எனவே தமிழக அரசு மத்திய அரசுக்கு அந்த அழுத்தத்தை கொடுக்க வேண்டும் ஆனால் அப்படியெல்லாம் தமிழக அரசு அழுத்ததை கொடுக்கும் நிலையில் இல்லை என்பதே உண்மை. மாநிலத்தின் உரிமைகள் பறிபோகும் நிலையில் அதை சரி செய்ய வேண்டிய தார்மீக பொறுப்பு மத்திய அரசுக்கு உள்ளது. ஆனால் திட்டமிட்டே இவ்வாறான தாக்குதல்களை மத்திய அரசு கையாள்கிறது. இது தமிழகத்தின் சமூகநீதியை காவு கொடுக்கும் செயலாகும்.

தமிழகத்தை ஆட்சிச் செய்து கொண்டிருக்கிற பா.ஜ.க.,வின் பினாமி அரசிற்கோ இந்தியாவின் பண்டைய கலாச்சாரத்தை குழிதோண்டி புதைக்கும் வகையில் செயல்பட்டு வரும் மோடி அரசிற்கோ தமிழ் மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்க வேண்டும் என்று எள் முனை அளவு கூட அக்கறை இல்லை என்பதே எதார்த்தம்.

தகுதியுள்ள மாணவர்களை நீட் தேர்வு தகுதியற்ற மாணவர்களாக்குகிறது என்று முன்னாள் முதல்வர் ஜெயலலிதா தேர்தல் வாக்குறுதியின் போது அறிவித்தார். ஆனால் அவர் விட்டுச் சென்ற ஆட்சியில் அங்கம் வகிப்பவர்கள் அதற்கு நேர்மறையாக செயலாற்றுகிறார்கள். ஜெயலலிதா உயிரோடு இருந்திருந்தால், மாணவி அனிதா இறந்திருக்க மாட்டார்.

நீட் தேர்வு என்ற பெயரில் தமிழக மாணவர்கள் வஞ்சிக்கப்பட்டுள்ளனர். நமது கல்வியுரிமை பறிக்கப்பட்டுள்ளது. நீட் தேர்வால் கிராமப்புற, நகர்ப்புற ஏழை மாணவர்களின் மருத்துவர் கனவு சிதைக்கப்பட்டுள்ளது. இதற்கு மத்திய பா.ஜ.க., அரசும், அதற்குத் துணையாக அ.தி.மு.க. அரசுமே பொறுப்பேற்க வேண்டும்.

சமூகநீதி, இடஒதுக்கீடு கொள்கைக்கு எதிராக பா.ஜ.க., செயல்பட்டு வருகிறது. நீட் தேர்விலிருந்து 1 ஆண்டுக்கு விலக்கு அளிக்கப்படும் என மத்திய, மாநில அமைச்சர்கள் வாக்குறுதி அளித்து கடைசி நேரத்தில் மாணவர் களை வஞ்சித்துள்ளனர். இது மாணவர்களின் பிரச்சினை மட்டுமல்ல, மாநிலத் தின் உரிமை பிரச்சினை என்பதை ஆட்சியாளர்கள் உணரவில்லை.

தேர்விலிருந்து தமிழகத்திற்கு விலக்கு பெறப் படும் என்று முதலில் அறிவித்து, பின்னர் ஓராண்டு மட்டும் விலக்கு என கோரிக்கை தேய்ந்து இப்போது முழுவதுமாக படுகுழியில் தமிழ்நாட்டு மாணவர் களை தள்ளியிருக்கிறது

சமஸ்கிருதம் படித்த பார்ப்பனர்கள் மட்டுமே மருத்துவம் படிக்க முடியும் என்ற 1920 களுக்கு முந்தைய காலத்தினை மீண்டும் நிறுவிக் கொண்டி ருக்கிறது பார்ப்பனிய அரசு.

பல்வேறு கலாச்சாரங்களையும், பல்வேறு தரப்பட்ட வரலாறு கொண்ட தேசிய இன மக்கள் வாழும் இந்திய ஒன்றியத்தில் ஒற்றைக் கல்வி முறையை திணிப்பது கண்டிக்கத்தது. பார்ப்பனிய CBSE முறையில் தான் அனைவரும் படிக்க வேண்டும் என தள்ளுவது எதேச்சதிகாரம்.

இந்தியாவில் தமிழ்நாடு தான் சிறந்த மருத்துவப் பின்னணியைக் கொண்டிருக்கிறது. தமிழ்நாட்டில் தான் அதிகபட்சமாக 24 மருத்துவக் கல்லூரிகள் இருக்கின்றன. தமிழ்நாடுதான் இந்தியாவிலேயே அதிக மருத்துவ இடங்களை உருவாக்கியிருக்கிறது.

குழந்தைகள் இறப்பு விகிதம் தமிழ்நாட்டில் 1000க்கு 21. இந்தியாவில் 1000க்கு 40.

பிரசவத்தில் இறக்கும் தாய்கள் விகிதம் தமிழ்நாட்டில் 1 லட்சத்துக்கு 79. இந்தியாவில் 167.

ஊட்டச்சத்து குறைபாடுள்ள குழந்தைகள் தமிழ்நாட்டில் 18%. இந்தியாவில் 28%.

1 லட்சம் பேருக்கு தமிழ்நாட்டில் 149 மருத்துவர்கள். இந்தியாவில் 36.

வெளிநாட்டு நோயாளிகள் சிகிச்சைக்காக அதிகமாக வருகை புரிவது தமிழ்நாட்டிற்குத்தான்.

மருத்துவ உயர்கல்வியில் பல்வேறு ஆய்வுப் படிப்புகளுக்கான இடங்கள் தமிழ்நாட்டில் தான் இருக்கின்றன.

இவை அனைத்தையும் தமிழ்நாடு தனது சொந்த முயற்சியில் உருவாக்கிக் காட்டியது. தனது மாநிலத்தின் கல்வி வழியே படித்த மாணவர்கள் உருவாக்கியது. CBSE பாடத்திட்டத்தில் படித்து வந்தவர்கள் எவரும் இதை செய்துவிடவில்லை.

தமிழ்நாட்டில் மாநில அரசின் பாடத் திட்டப்படி 4.2 லட்சம் மாணவர்கள் அறிவியல் பாடத் திட்டத்தின் கீழ் படித்துள்ளனர். ஆனால் CBSE மாணவர்கள் வெறும் 4,675 பேர்தான்.

ஒட்டுமொத்த பிற்படுத்தப்பட்ட மற்றும் தாழ்த்தப்பட்ட சமூகத்தின் மாணவர்களை மருத்து வப் படிப்பிலிருந்து தகுதி நீக்கம் செய்திருக்கிறது பாஜக அரசு.

கல்வி என்பது மாநிலங்களின் உரிமை. நாம் எந்த கல்வி முறையில் பயில வேண்டும் என்பதை மத்திய அரசு முடிவு செய்யமுடியாது. அது அரசியல் சட்டத்திற்கு புறம்பானது. மாநில சுயாட்சி உரிமையினை தட்டிப் பறிக்கும் செயலாகும்.

இந்திய அரசமைப்புச் சட்டத்தில் உள்ள பொது அதிகாரப் பட்டியலில் "கல்வி" சேர்க்கப்பட்டுள்ளது. இந்தப் பொது அதிகாரப் பட்டியல் என்பது, மாநில அரசுக்கும் - மத்திய அரசுக்கும் பொதுவான அதிகாரப் பட்டியலாகும். இதில் மாநில அரசும் சட்டம் இயற்றலாம், மத்திய அரசும் சட்டம் இயற்றலாம்.

தமிழ்நாடு சட்டப்பேரவை 2017 பிப்ரவரி மாதம், ஒரு மனதாக சட்ட முன்வடிவு நிறைவேற்றி குடியரசுத் தலைவர் ஒப்புதலுக்காக தில்லிக்கு அனுப்பி வைத்தது. இதுவரை அந்த சட்ட முன் வடிவுக்கு ஒப்புதல் தராமலும், நேரடியாக மறுப்புத் தெரிவிக்காமலும் கிடப்பில் போட்டு விட்டது மத்திய அரசு!

இதுபோல் இந்தியாவின் பல மாநிலங்களி லிருந்து, "பொதுப்பட்டியல்" தொடர்பாக, பல்வேறு துறைகள் சார்பாக நிறைவேற்றப்பட்ட 95 சட்ட முன் வடிவுகளுக்கு மத்திய அரசு ஒப்புதல் தராமல் கிடப்பில் போட்டுள்ளது என்று செய்தி வெளியாகி யுள்ளது. இவற்றில் தமிழ்நாடு அரசு அனுப்பி வைத்த 5 சட்ட முன் வடிவுகளும் அடங்கும்!

சமூக நீதியை துச்சமாக நினைக்கும் மத்திய அரசும், தமிழகஅரசின் அலட்சியமும்தான் அனிதா வின் மரணத்துக்கு காரணம். பாதிக்கப்பட்ட மாணவர்கள் இனியும் இதுபோன்ற முடிவுகளுக்கு செல்லாமல் மத்திய, மாநில அரசுகளை எதிர்த்து நீட் தேர்வுக்கு விலக்கு அளிக்கும் வரை போராட வேண்டும். அதுதான் நமது எதிர்கால கடமை.

# தமிழ்ப் பெரியோர்கள்!



பெருந்தலைவர் காமராஜர் 1954ஆம் ஆண்டு முதல் வராகப் பதவியேற்றார். ஆனால் அப்போது அவர் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் படவில்லை. அதனால் ஆறு மாதத்துக்குள் ஏதாவது ஒரு தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றாக வேண்டும். தேர்தலில் போட்டியிட வேண்டியது இல்லை. எம்.எல்.சியாக பொறுப்பேற்றுக் கொள்ள லாம் என்று பலரும் கூற, அதை காமராஜர் ஏற்றுக் கொள்ளவில்லை. அவருக்குத் தொடர்பே இல்லாத குடியாத்தம் தொகுதியில் போட்டி யிட்டார். அவரை எதிர்த்து அப்போது கம்யூனிஸ்டு கட்சியில் புகழ்பெற்ற கோதண்டராமன் போட்டி போட்டார். கம்யூனிஸ்டுகாரர் களால் கடுமையான பரப்புரை நடத்தப்பட்டது.

அப்போது ஓர் இடத்தில் பொதுமக்கள், தங்களுக்கு மேம்பாலம் கட்டித்தர வேண்டும் என்று கோரிக்கை வைத்தனர். காமராஜர் சரி என்று சொன்னால் அங்குள்ள ஒட்டுமொத்த ஓட்டுகளும் அவருக்கே கிடைக்கும். ஆனால், அவர் அப்படி எல்லாம் சொல்ல முடியாது என்று மறுத்து விட்டார். உடனிருந்தவர்கள், ஏன் மறுத்தீர்கள்? எனக் கேட்க, மக்கள் கோரிக்கை நியாயமானதுதான். நான் அப்படிக் கேட்டால் எதிர்க்கட்சி வேட்பாளர் கோதண்டராமன் என்ன சொல்லி ஓட்டுகேட்பார்? நான் பாலம் கட்டித் தருவேன் என்று கூறுவது அதிகார துஷ்பிரயோகம் அல்லவா? இது எப்படி ஜனநாயகம் ஆகும்? தேர்தலில் வெற்றி பெற்ற பிறகு மக்களின் கோரிக்கையை நிறைவேற்றி வைப்பதுதான் நியாயம் என்று காமராஜர் கூற, உடனிருந்தவர்கள் வியந்து போனார்கள்.

ஒரு சமயம் அண்ணா தனது இரு நண்பர்க ளுடன் போடி நாயக்கனூர் அருகே ஒரு கிராமத்தில் கட்சி சார்பாகப் பேச ரெயிலில் வந்து இறங்கினார். அவர்கள் ரெயிலில் போடி நாயக்கனூர் வந்தபோது, கூட்டம் நடக்கும் இடத்தின் அருகே செல்லும் பஸ் போய்விட்டது. இனி என்ன செய்வது என்று அவர்கள் கையைப் பிசைந்து கொண்டு நின்ற நிலையில் எதிரே ஒரு லாரி வந்து கொண்டிருந்தது. அண்ணாவுடன் வந்த நண்பர்கள் கையைக் காட்டி லாரியை நிறுத்தினர். வண்டியை நிறுத்திய லாரி டிரைவர், என்ன சமாச்சாரம்? என்று கேட்டார்.

நாங்கள் ஒரு கூட்டத்துக்கு பேசச் செல்கிறோம். பஸ் போய் விட்டது என்ன செய்வது என்று யோசித்துக் கொண்டிருக்கிறோம். மக்களை ஏமாற்றக்கூடாது அல்லவா? என்று ஒருவர் கூற, அதற்கு அந்த டிரைவர், நீங்கள் என்ன அண்ணா துரையா? என எதிர் வினா தொடுத்தார். பக்கத்தில் நின்ற அண்ணா, நான் தான் அண்ணா துரை என்று கூற, மேலிருந்து ஏற இறங்கப் பார்த்த டிரைவர் கீழே இறங்கி வந்து அண்ணாவின் கைகளைப் பற்றிக்கொண்டார். தங்களைப் பற்றி கேள்விப் பட்டிருக்கிறேன். தங்கள் புகைப்படத்தை செய்திக் தாள்களில் பார்த்திருக்கிறேன். இப்படி நேரில் சந்திப்போம் என கனவிலும் நினைக்க வில்லை என உணர்ச்சி வசப்பட, எல்லோர் முகங்களிலும் மகிழ்ச்சி தாண்டவமாடியது. லாரி பயணமும் தொடங்கியது.

**குமரியின் விடிவெள்ளி**

கன்னியாகுமரி மாவட்டம் அப்போதைய திருவிதாங்கூர் சமஸ்தானத்துடன் இணைந்திருந்த போது தமிழர்கள் மிகுந்த ஒடுக்குமுறைக்கு உள்ளானார்கள். அப்போது புதிய விடிவெள்ளி யாய் தோன்றினார் மார்சல் நேசமணி. அவர் தனது வழக்கறிஞர் தொழிலை அப்போது ஆரம்பித்தார். அனைத்துத் துறைகளிலும் முன்னின்று மக்களுக் காகச் செயலாற்றி நற்பெயர் பெற்றார். அக்காலத்தில் கோர்ட்டில் கூட தீண்டாமை கோரத்தாண்டவம் ஆடியது, கோர்ட்டில் முற்பட்ட சாதி வழக்கறிஞர் களுக்கு நாற்காலிகளும், மற்ற எல்லா இன வழக்கறிஞர்களுக்கும் ஸ்டூலும் போடப்பட்டி ருந்தன.

வழக்குத் தொடுப்பவர்களும் கோர்ட்டுக்கு வெளியே தங்களுடைய துண்டைக் கட்டிக்கொண்டு கோர்ட்டுக்கு வெளியில் நிற்க வேண்டும். நேசமணி அந்த ஸ்டூலில் உட்காராமல் முற்பட்ட சாதி வழக்கறிஞர்கள் உட்காரும் சேரில் போய் உட்கார்ந்தார். தன்னுடைய மனுதாரர்களை சாட்சியின்போது கோர்ட்டுக்குள்ளே அழைத்து வந்தார். அது திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. நேசமணியின் தலைமையை ஏற்று, சமுதாயத்தில் ஒடுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட வழக்கறிஞர்கள் போராட முன்வந்தனர். நிலைமையை உணர்ந்த திருவிதாங் கூர் அரசு, எல்லா வழக்கறிஞர்களும் நாற்காலியில் அமரலாம் என்று அனுமதி வழங்கியது. வழக்குத் தொடுப்பவர்களும் தேவைப்பட்டால் நீதிமன்றத் துக்குள் வரலாம் என ஆணை பிறப்பிக்கப்பட்டது.

**ஆர்.கே. லிங்கேசன்,** மேலகிருஷ்ணன்புதூர்.



Owned, Published and Printed by **V. Thalapathi,** Published from No. 124 N.T.R Street, Rangarajapuram, Kodambakkam, Chennai - 24. and Printed at **DESIGNS PARK,** No. 22 weavers street triplicane, chennai-5, Editor: **V. THALAPATHI.**


12 ஆவது
மதுரை புத்தகத் திருவிழா
நாள் : 01.09.2017 முதல் 12.09.2017 வரை
காலம்: காலை 11 முதல் இரவு 9 மணி வரை
(சனி, ஞாயிறு காலை 10.00 மணி முதல் இரவு 9 மணி வரை)
தமுக்கம் மைதானம், மதுரை
கடை எண் 95
பன்மை வெளி
பெ.மணியரசன் – கி. வெங்கட்ராமன் எழுதிய
நூல்கள் விற்பனைக்கு
திராவிடம் தமிழர் மறுமலர்ச்சியை வளர்த்ததா வழிமாற்றியதா?
பசுமை மார்க்சியமும் தமிழ்த் தேசியமும்
தமிழ்த் தேசக் குடியரசு
மாற்று அரசியல் எது?
காவிரி நேற்று–இன்று–நாளை
தமிழர் மீட்சி இனமுழக்கம்
மொழிப்போர் முன்னெடுப்போம்
தமிழர் தாயகமா வெளியாரின் வேட்டைக் காடா?
தமிழ்த்தேசியத்தின் பன்மை
உணவு – உழவு எதிர்காலம்
சாதியும் தமிழ்த்தேசியமும்
உலகமயம் இந்தியம் தமிழ்த்தேசியம்
தொழிலாளர் பகைச் சட்டங்களைத் தகர்த்தெறிவோம்
தை நிமிர்வு
கச்சத்தீவு
ஏழு தமிழர் விடுதலை
செல்லாத ரூபாய் சொல்லாத சூழ்ச்சி
அனைத்து நூல்களுக்கும் சிறப்புக் கழிவு உண்டு!
தொடர்புக்கு
044 24742911
98408 48594

MUTRAM - Tamil & English Monthly R.Dis No. 1678-2012
RNI No. TNBIL/2010/36924. REGISTERED TN / CC ( S ) DN / 496 / 14 - 16.
Date of Publication 7th of every month



# சமூக ஊடகங்களின் குரல்வளையை நெறிக்கும் எதேச்சதிகார மனுவாதிகளின் செயலை வன்மையாகக் கண்டிக்கிறோம்!

## செந்தமிழ்நாடு ஊடகவியலாளர்கள் சங்கம்